பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 05 திங்கட்கிழமை 20.07.2020 கதிர் 253


### இது ரகசியம் அல்ல!

தேர்தல் முறைகேடுகள், குளறுபடிகள் தொடர்பாக இப்பத்தியில் நாம் திரும்பத் திரும்ப எடுத்துரைத்த வந்தமைக்கு சற்றுப் பலன் கிடைத்திருப்பது போலத் தெரிகின்றது.

'அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்'

பக்கம்02

# மாற்றுக் கட்சியை உதறி எறியுங்கள்; கூட்டமைப்புக்கு ஆணை தாருங்கள்!



## தமிழ் மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

நான் தமிழ் மக்களிடம் மிகவும் தாழ்மையாகவும் அன்பாகவும் கேட்டுக்கொள்வது என்னவெனில் மாற்றுக் கட்சிகளை உதாசீனம் செய்யுங்கள்; நிராகரியுங்கள். அந்தக் கட்சிகளால் உங்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தனிப்பட்ட நபர் ஒருவர் நாடாளுமன்றத்துக்கு வந்து எதையும் செய்ய முடியாது. தனிப்பட்ட நபர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பக்கம் 02

## சலுகைகளை வழங்கி சம்பந்தனை ஒருபோதும் சமாளிக்கவே முடியாது

### மஹிந்த, ரணிலிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

சலுகைகளைவழங்கிசம்பந்தனைச் சமாளிக்கலாம் என்று மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ நினைக்கக்கூடாது. சலுகைகளை வழங்கி சம்பந்தனை ஒருபோதும் சமாளிக்கவே முடியாது.

– இவ்வாறு

பக்கம் 02

## ரிஷாத்துக்கு மீண்டும் சி.ஐ.டி. அழைப்பாணை

(அஸீம் கிலாப்தீன்)

கொழும்பு, ஜூலை 20

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை மீண்டும் இன்று காலை 9.30 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பாணை

பக்கம் 02

## சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க இடையூறு செய்யும் அரசியல்வாதி

### பொலிஸாரும் அவர் பக்கம் நின்று அதிகாரிகளுக்குக் கடும் மிரட்டல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் வத்திராயன் பகுதியில் எந்தவித அனுமதியும் இன்றிச் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த முயன்ற மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரியின் கடமையைச் செய்யவிடாது அரசியல்வாதி ஒருவர் குறுக்கிட்டு தடுத்ததோடு சந்தேக

பக்கம் 11

## தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் தூக்கப்படுகிறார்

### கொழும்பிலிருந்து அச்சுதன் யாழுக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இரண்டாவது அதிரடி நடவடிக்கை இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத்

பக்கம் 02

## மஹிந்தவுக்கு எச்சரிக்கை விடுத்த பொதுபலசேனா!

கொழும்பு, ஜூலை 20

மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குச் செல்லவேண்டுமாயின் குருநாகல் மரபுரிமை உடைப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட

பக்கம் 02




## எனது தோல்விக்கே நீங்களே காரணம்!

### சம்பந்தனின் முகத்துக்கு நேரே விசனித்தாராம் மஹிந்தர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்ட காரணத்தால் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். அந்தத் தேர்தலின் பின் அவர் என்னை முதன்முதலாக நேரில் சந்தித்த போது, தன்னுடைய தோல்விக்கு முக்கிய காரணம் நீங்கள்தான் என்று சொன்னார்.

– இவ்வாறு

பக்கம் 02

## பல்கலை கிளிநொச்சி வளாகத்துக்குள் காட்டு யானை தாக்கி ஒருவர் படுகாயம்

### பெண் விரிவுரையாளருக்கு நேர்ந்த கதி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக எல்லைக்குள் நேற்று முன்னிரவு காட்டு யானை புகுந்து தாக்கியதில் பெண் விரிவுரையாளர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தென் பகுதியைச்

பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பார்கள்.

அரச நிதியில் பல கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வடக்குஅரசியல்வாதி ஒருவர் தன்னுடைய சொந்தத் திட்டங்கள் போல காட்டி, திறப்பு விழா நடத்தி, தேர்தல் சமயத்தில் முறையற்ற அரசியல் ஆதாயம் தேடுகின்றார் என்ற சாரப்பட பல தரப்புகளினால் தேர்தல் ஆணையத்துக்குத் தொடர்ந்து பல முறைப்பாடுகள் சென்று கொண்டிருந்தன. ஊடகங்களும் பல தடவைகள் விடயத்தை அம்பலப்படுத்தின. ஆனால் ஏதும் நடக்கவில்லை.

அந்த அரசியல்வாதியின் 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைக்கும் திருகுதாளம்' தொடர்ந்தது.

தடுப்பார் யாருமின்றி 'அட்டகாசம்' அரங்கேறிக் கொண்டிருந்தது.

அந்த அரசியல்வாதியின் புண்ணியத்தில் சில,பல பதவியைப் பிடித்த அரச உயரதிகாரிகளின் தவறான நடத்தையால் இந்த முறைகேட்டைத் தடுக்க முடியாத நிலைமை தொடர்ந்தது.

தேர்தல் திணைக்களம் விசாரணை நடத்தியது. பல விடயங்களை ஆராய்ந்தது. உத்தரவுகளைப் போட்டது.பணிப்புரைகளை விடுத்தது. ஆனால் அந்த அரசியல்வாதியின் திருகுதாளத் திருவிழாத் தொடர்ந்தது. தடுக்க முடியவில்லை.

இது விடயத்தில் தேர்தல் திணைக்களத்தினால் எதுவும் வெட்டிப் பிடுங்க முடியாது, எதுவுமே நடக்கப் போவதில்லை என நானே இப்பத்தியில் விசனத்துடன் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

ஆனால், தேர்தல் திணைக்களம் – ஆணையம் – தன் பலத்தை இப்போது காட்டத் தொடங்கியிருக்கின்றது.

இந்த விவகாரத்தில் பல தரப்புகளில் இருந்தும் பல முறைப்பாடுகள். தேர்தல் அதிகாரிகள் முறைப்பாடு கிடைத்து சம்பவ இடத்துக்குப் போனால் அதற்கு முன்னரே சம்பந்தப்பட்ட அரசியல்வாதி வேலையை முடித்து விட்டு ஜாகா வாங்கியிருப்பார்.

ஒன்று – அரச நிதியிலான திட்டங்களை அந்த அரசியல்வாதி வந்து திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் சத்தம் சந்தடியின்றி செய்யும் அதிகாரிகளின் முறைகேடு.

அடுத்தது – அவ் விடயங்கள் குறித்து முறைப்பாடு செய்தால் அது குறித்த நடவடிக்கை எடுக்க முன்னரே, அந்த முறைப்பாடு பற்றிய தகவலை அந்த அரசியல்வாதியின் தரப்புக்குக் கசிய விட்டு விட்டு, பின்னர் மெத்தனமாக நடவடிக்கை எடுக்கும் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளின் முறைதவறல் போக்கு.

இரண்டு பற்றியும் தேர்தல் ஆணையத்துக்கு விளக்கமான – விவரமான – புகார்கள் பல தரப்பிலிருந்தும் கிட்டின.

அதனை அடுத்து முதல் கட்டமாக யாழ்ப்பாணம் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு இரண்டாம் நிலை அதிகாரியாக ஒரு தென்னிலங்கைச் சிங்களவரை அனுப்பியது தேர்தல் ஆணையம்.

அப்படி இருந்தும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. அரசியல்வாதியினதும் அவருக்குத் துணைபோகும் அதிகாரிகளினதும் கைவரிசை தொடர்ந்தது.

அதையடுத்து, இரண்டாவது கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணம் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியைத் தூக்குகிறது ஆணையம். கொழும்பிலிருந்து உதவித் தேர்தல் ஆணையர் ஒருவரைத் தேர்தல் முறைப்பாடுகளை உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுக்கும் விசேட அதிகாரத்துடன் அது அனுப்பி வைத்திருக்கின்றது.

இனியும் இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதியினதும் அவருக்கு ஜால்ரா போடும் அரச அதிகாரிகளினதும் கொட்டம் அடங்காமல் தொடருமானால் சட்டம் தன் கைவரிசையை மேலும் காட்டும் என்று நம்பலாம்.

இப்போதும் – இந்த அதிரடி நியமன மாற்றத்தின் பின்னரும் – நிலைமை சீரடையாவிட்டால், இதற்கு மேல் எந்த அதிகாரியைத் தேர்தல் ஆணையம் மாற்றுமோ தெரியாது. அது, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நியமனப் பதவி நிலை என்றால் கூட ஆச்சரியப்படத் தேவையில்லை.

ஏனென்றொல் இங்கு நடந்த தேர்தல் விதி முறை மீறல்கள் தொடர்பிலும், அதுபற்றிய முறைப்பாடுகள் கிடைத்தும் தடுக்க முடியாமல் போனமை பற்றியும், தடுப்பதற்குத் தாங்கள் நடவடிக்கைகள் எடுத்தும் அதற்குக் கட்டுப்படாமல் அந்த அரசியல்வாதி குதித்துக் கொண்டு தன் கைவரிசையைக் காட்டியமை குறித்தும், தேர்தல் ஆணையம் கொதித்துப் போய் இருக்கின்றமையை அறிய முடிந்தது.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு நிர்வாக மாவட்டங்கள் இருக்கின்றமையும் –

இவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச அதிபரே (அல்லது மாவட்டச் செயலரே) யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் (கிளிநொச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கியது) தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்பட்டிருக்கின்றமையும் –

கிளிநொச்சி அரச அதிபர் அத்தகைய நியமனம் ஏதும் பெறாமல் வெறுமனே உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

தேர்தல் விதிமுறை மீறல் புகார்கள் தொடர்பான நடவடிக்கைகளில் நேர்மையான செயற்பாடுகள் இல்லை, அந்தப் புகார்களுடன் அரச அதிகாரிகளுக்கு சம்பந்தம் என்ற குற்றச்சாட்டு தொடருதல் என நிலைமை நீடிக்குமானால், இதற்கு மேலும் அதிகாரிகளில் மாற்றம் வந்தாலும் வரலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குத் தான் சுழற்றும் நீதி வாள் மொட்டையானது அல்ல, கூர்மையானது எனக் காட்ட முயல்கின்றது தேர்தல் ஆணையம்.

அதன் முயற்சி பாராட்டுக்குரியது...!

–மின்னல் –

---

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ போன்றவர்களது ஆட்சியில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது எனத் தாம் நம்பினார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குருநாகலில் உடைக்கப்பட்டுள்ள வரலாற்று அடையாளமான புவனேக பாகு மன்னனுடைய அரச சபையை பார்வையிடுவதற்காக நேற்று ஞானசார தேரர் அங்கு சென்றிருந்தார். அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ராஜபக்ஷக்களது பெருமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர்களுக்கு கீழ் உள்ளவர்களே இந்த உடைப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

மேலும், சிகிரியாவுக்குச் சென்ற தமிழ் இளைஞரொருவர் அங்குள்ள சுவரில் கீறியதற்காக கைது செய்யப்பட்டார் என்றும் அதனை அண்மித்த விகாரையொன்றில் இளைஞர்கள் சிலர் முறை தவறாக ஒளிப்படம் எடுத்தமைக்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இருக்கையில், பெரும் வரலாற்றுச் சிறப்பும் முக்கியத்துமும் மிக்க கட்டடம் உடைக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று கேள்வியெழுப்பியுள்ள அவர், பலமற்ற பொதுமக்கள் மீதுதான் சட்டம் பாயுமா என்றும் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவரது வேலைத் திட்டத்தை இதில் காண்பிக்குமாறு கோருகின்றோம். இந்தக் கட்டம் குறித்து 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நாட்டு தேசிய சொத்துக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையே இதுவாகும் என்று ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நீதியை நிலைநாட்ட வேண்டும் எனவும் ஒரு சதமும் மக்களின் வரிப்பணத்தில் இல்லாமல் இதனை தகர்த்தவர்களது சொந்தச் செலவில் கட்டடம் புனரமைக்கப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது..

அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவிற்குப் பொறுப்பாகச் செயல்படும் மேலதிக மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் அப்பொறுப்பிலிருந்து விலக்கப்பட கொழும்பிலிருந்து உதவித் தேர்தல் ஆணையாளரான அச்சுதன் அந்தப் பொறுப்பில் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் விடயத்தில் குளறுபடிகள் இடம்பெறுகின்றன எனத் தொடர்ந்தும் பல அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் அதனை ஆராய்ந்த ஆணைக்குழு இந்த முடிவிற்கு வந்துள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன..

ஏற்கனவே விசாரணைப் பிரிவிற்கு கொழும்பில் இருந்து ஒரு சிங்கள அதிகாரி நியமிக்கப்பட்ட நிலையில் தற்போது பொறுப்பு அதிகாரியாக உதவித் தேர்தல் ஆணையாளரான அச்சுதன் இன்று முதல் நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## சலுகைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுவதற்காக எமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கமாட்டோம்; உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டோம். இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது எமது கடமை. நாங்கள் இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

சலுகைகளை வழங்கி சம்பந்தனைச் சமாளிக்கலாம் என்று மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ நினைக்கக்கூடாது. சலுகைகளை வழங்கி சம்பந்தனை ஒருபோதும் சமாளிக்கவே முடியாது. சம்பந்தனைச் சமாளிப்பதாக இருந்தால் சம்பந்தனுடைய மக்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளை வழங்கவேண்டும். அவற்றைக் கொடுத்தால் தான் சம்பந்தனை அவர்களால் சமாதானப்படுத்த முடியும்; சமாளிக்க முடியும். இதுதான் உண்மையான நிலைமை. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் – என்றார்.

---

## எனது தோல்விக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நாடு சர்வாதிகாரப் போக்கில் சென்ற காரணத்தால் 2015ஆம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவரை எதிர்ப்பதற்கும், பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்வதற்கும் எங்களால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்தோம்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷவும் நானும் ஒரு சந்திப்பில் ஈடுபட்டிருந்தோம். தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற அந்த முதலாவது சந்திப்பில் அவர் என்னைப் பார்த்து, என்னுடைய தோல்விக்கு முக்கிய காரணம் நீங்கள்தான் என்று சொன்னார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டரசை நாம் ஆதரித்தோம். அந்தக் கூட்டரசு தொடரும், ஒரு மித்துச் செயற்படும், எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நினைத்தோம். துரதிஷ்டவசமாக அந்தக் கூட்டரசு தொடரவில்லை. எனினும், தீர்வுக்கான எமது பயணம் இப்போதும் தொடர்கின்றது.

புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அது அத்தியாவசியமானது. அது புதிய அரசின் கடமையாகும். அந்தக் கடமையில் நாங்களும் பங்களிப்பை வழங்குவோம். எமது மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். அந்தத் தீர்வை வென்றெடுக்கவே இந்தப் பொதுத்தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம்– என்றார்.

---

## மாற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரியுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமான ஓர் அணியாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவையுங்கள். தனிப்பட்ட நபர்களை முற்றாக நிராகரியுங்கள். எமக்கு ஆணையைத் தாருங்கள்.

மாற்றுக் கட்சி என்ற பெயரில் போட்டியிடும் தனிப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஓர் ஆசனத்தை வென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் ஆதரவு இல்லை. வன்னியிலும் ஆதரவு இல்லை. எனவே, யாழ்ப்பாணத்தில் மட்டும் ஓர் ஆசனத்தை வென்று எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. ஆனபடியால் தமிழ் மக்கள் தங்கள் முழுமையான ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எங்களுக்குத் தாருங்கள் என்று மிகவும் தாழ்மையாகவும் அன்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

---

## ரிஷாத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத்தின் தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைக்கு அழைப்பதை தேர்தல் முடியும் வரை இடைநிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றின் ஊடாக அறிவித்திருந்த நிலையிலும், அதற்கு முரணான வகையில் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக ரிஷாத்தின் அலுவலகம் தெரிவித்தது.

ஈஸ்டர் தாக்குதல் குண்டுதாரி இன்றாப் அஹமட் தொடர்பிலான விவகாரம் ஒன்று குறித்தே, வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ரிஷாத், கட்டாயம் ஆஜராகவேண்டுமென குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இந்த அழைப்பாணையை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபருக்கு விடுத்த அறிவுறுத்தலின் பின்னர், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தமது தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதற்காக அம்பாறைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே, இந்த அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

## பல்கலை கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த காயித்திரி (வயது 35)என்னும் விரிவுரையாளரே படுகாயமடைந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வளாகத்தின் 400 ஏக்கர் எல்லைப் பரப்பிற்குள் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு வழிபாட்டிற்காகச் சென்ற இருவர் விடுதி நோக்கி நடந்து பயணித்துள்ளனர். அச்சமயமே காட்டு யானை திடீரென தாக்கியதில் அந்த விரிவுரையாளர் படுகாயமடைந்துள்ளார். கூடப் பயணித்தவரின் துணையுடன் அவர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# புலி நீக்க, தமிழ்த் தேசிய நீக்க அரசியல் செய்யாத கூட்டமைப்பினரைத் தேர்ந்து வாக்கை அளியுங்கள்!

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா கோரிக்கை

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்பாணம்,ஜுலை 19

வீட்டுக்கு வாக்களிக்கின்ற அனைவரும் தமது முதல் வாக்கினை எமது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு வழங்க வேண்டும். மற்றைய இரு வாக்குகளை புலிநீக்க அரசியல், தமிழ் தேசிய நீக்க அரசியல் ஈடுபடுபவர்கள் கட்சிக்குள்ளே இருந்தாலும் அவர்களுக்கு வழங்காது எமது தேசிய பிரச்சினைகளைப் பலமாகக் கொண்டு செல்லக்கூடியவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

'தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்' எனும் தலைப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்துரை கூட்டம் நேற்று முன்தினம் கந்தர்மடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது மக்களிடம் கேள்வி ஒன்று எழுந்துள்ளது. உங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து ஓர் இலக்கை அடைய முடியவில்லை. தொடர்ந்தும் உங்களுக்குள்ளே பிரச்சினை இருந்துவருகிறது. அப்படியெனில் 1949ம் ஆண்டில் இருந்து இயங்குகின்ற தமிழரசுக்கட்சி 2001 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்போடு இனங்கிச் செல்வதில்லையா என மக்கள் கேட்கின்றனர்.




தமிழீழ விடுதலைப் புலிகள் ஏன் ஆயுதப்போராட்டத்திற்கு தள்ளப்பட்டனர்? அது அவர்களாக ஏற்றுக்கொண்டதல்ல. வன்முறையாளர்களைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போதில்லை சிலர் இப்போது கூறிகின்றனர். இவர்கள் ஆயுதப் போராட்டம் எப்படி ஆரம்பிக்கப்பட்டது என்பதனை நேரடியாக அறியாதவர்கள். ஆனால் நான் அவ்வாறில்லை. தமிழராய்ச்சி மகாநாட்டிலே விழுந்தடித்து ஒடியது இன்னும் நினைவில் உள்ளது.

இவ்வாறு எமது மக்களின் துன்பங்கள், துயரங்களை நேரில் அவதானித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளின் வழக்குகளில் ஆஜராகி மூவாயிரத்திற்கும் மேற்பட்ட உறவுகளின் கதைகளைக் கேட்டு கேட்டு மனதில் அவை படிந்துள்ளன.

நாங்கள் சிறுபான்மையின மக்கள் இல்லை. எங்களுக்கென பூர்வீக நிலம் உள்ளது. எங்களுக்கென்ற தனித்துவமான மொழி உள்ளது. எனவே தமிழர்களாகிய நாங்கள் ஒரு தேசிய இனம். அந்த இனத்திற்கான அரசியல் சமத்துவம், அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாமல் போன சூழ்நிலையில்தான் நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

எமது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வைக்கப்பட்டார்களே ஒழிய அவர்களாக ஆயுதம் தூக்கவில்லை. 1956 ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாராரநாயக்கவுக்கும் இடையில் இடம்பெற்ற உடன்படிக்கையை சிங்களவர்கள் நிறைவேற்றி இருந்தால் தமிழர்கள் ஆயுதத்தை ஏந்தியிருக்க மாட்டார்கள் என 2011 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் உரையாற்றினார்.

உன்மையில் ஆயுத ரீதியான யுத்தம் முடிவிற்கு வந்துவிட்டது. நாங்கள் ஆயுதமேந்தி தொடர்சியாக போராடினோம். இப்போது ஜனநாயக யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. இப்போது எமது ஆயுதமாக வாக்குச்சீட்டு காணப்படுகிறது. எங்கள் கையில் உள்ள வாக்குச் சீட்டைப் பாவிக்காது நாம் விடுவோமாக இருந்தால் வரலாற்றில் நாம் தவறிழைத்துவிட்டவர்களாக ஆகிவிடுவோம்.

மாற்று தலைமை ஒன்று உருவாக்கூடிய சூழல் இருந்தால் அதைப்பற்றி நாம் சிந்திக்கலாம். அதில் தவறில்லை ஆனால் மாற்றுத் தலைமைக்கான சூழல் இப்போது இல்லை. 225 கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டுமாக இருந்தால் குறைந்தது இருபது ஆசனங்கள் வேண்டும். இருபது ஆசனங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தவிர வேறு கட்சிகளால் பெற முடியாது. எனவே மாற்றுத் தலைமைபற்றி சிந்திப்பதில் அர்தமில்லை. – என்றார்

# கூட்டமைப்பின் பத்து வேட்பாளர்களும் ஒன்றாக பொது எதிரிகளைச் சந்திக்கத் தயாராகவுள்ளனர்

## வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் பெருமிதம்




**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்பாணம்,ஜுலை 20

கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள், ஏற்கனவே வெளியில் நின்றவர்கள் எம்மை விமர்சிக்கலாம். அவர்களின் விமர்சனங்கள் அரசியல் நோக்கம் கொண்டவையே தவிர தமிழ்த் தேசியநோக்குக் கொண்டவையோ அல்லது தமிழ் மக்களின் அபிலாசைகளை தாங்கியவையோ அல்ல என வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

'தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்' எனும் தலைப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்துரைக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்–

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகிய காலத்தில் இருந்து விடுதலைப் புலிகளினுடைய அங்கீகாரம் எமக்கு இருந்தது. அந்த அங்கீகாரத்தின் விளைவாகவே 2004 ஆம் ஆண்டு கூட்டமைப்பு 22 ஆசனங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து 2013 ஆம் ஆண்டும் அந்த ஆதரவை முன்வைத்து வடக்கு மாகாண சபையினைக் கைப்பற்றினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் செய்த ஒரே ஒரு தவறு தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கியது என எங்களோடு மாகாணசபையில் ஜந்து வருடங்கள் இணைந்து செயற்பட்டவர்கள் இப்போது சொல்கிறார்கள். இவர்களது கருத்துக்கள் வேடிக்கையாக உள்ளன.

விருப்புவாக்கு முறைமை காரணமாக சில சலசப்புக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் காணப்படுகிறது. விருப்பு வாக்கு முறைமையினால் எல்லா கட்சிகளுக்குள்ளும் சலசலப்புகள் இருக்கின்றன. ஆனால் எமது கட்சிக்குள் நடக்கும் விடயங்களை மட்டும் ஊடகங்கள் பெரிதாகப் பேசுகின்றன. தேசியம் பேசுகின்ற ஏனைய கட்சிகளுக்குள்ளும் விருப்பு வாக்கினால் பிரச்சினைகள் எழுந்துள்ளன. என்ச்வே அவற்றினை புறம்தள்ளிவிட்டு நாம் ஒன்றாக செயற்பட வேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒருவர் கூட்டமைப்பு மீது சவால் ஒன்றை விடுத்திருந்தார். அதாவது கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர்கள் அனைவரும் ஒரே மேடையில் ஒன்றாக இருக்கமாட்டார்கள் என்றார். ஆனால் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டபோது கூட்டமைப்பின் 10 வேட்பாளர்களும் ஒரே மேடையில் ஒன்றாகவே இருந்தனர். எங்களுடைய வேட்பாளர்கள் ஒற்றுமையுடன் பொது எதிரிகளைச் சந்திக்கின்ற நிலைப்பாட்டில் உள்ளனர். – என்றார்.

# சாரதியை கட்டிவைத்து வாடகை கார் கடத்தல்!

## ரயர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு இருவர் மடக்கிப் பிடிப்பு

கார் ஒன்றைக் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் கிரிஉல்ல பிரதேசத்தில் இருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் 119 இலக்கத்தின் மூலம் கிரிஉல்ல பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தொலைபேசித் தகவலுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது இந்தஇருவரும்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பில் வாடகை அடிப்படையில் சாரதியுடன் பெற்றுக்கொண்ட காரை, கிரிஉல்ல, கொஹிலவல பிரதேசத்தில் அதன் சாரதியைக் கட்டிப் போட்டுவிட்டு, கடத்திய சம்பவம் தொடர்பில் கிரியுல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கிரியுல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகள், வீதித் தடையை ஏற்படுத்தி வாகனங்களை சோதனையிட்டு வந்துள்ளனர். இதன்போது, நேற்று அதிகாலை பன்னலை திசையிலிருந்து கிரிஉல்ல திசை நோக்கிப் பயணித்த அந்தக் கார், யகாபெதிஎல்ல பிரதேசத்தில் பொலிஸாரினால் அவதானிக்கப்பட்டு, நிறுத்துமாறு சமிக்ஞை செய்யப்பட்டுள்ளது. இதன்போது, பொலிஸாரின் சமிக்ஞையையும் மீறி கார் பயணித்த வேளையில் பொலிஸாரினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இத்துப்பாக்கிச் சூடு, காரின் ரயரில் பாய்ந்ததன் காரணமாக கார் சற்றுத் தூரம் சென்று நிறுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காரில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பவர் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள் கிரிஉல்ல மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் கிரிஉல்ல பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ராஜபக்ஷக்களுடன்தான் பேசவேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களுள் ஒருவரும் புளொட்டின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் யதார்த்தபூர்வமான சில விடயங்களைப் பேசியிருக்கின்றார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, அவற்றை முழுமையாக ஆதரித்தவர் அவர். முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறி இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபட்டபோது, அது தொடர்பான தெரிவுக் குழுவின் உபகுழு ஒன்றின் தலைவராகப் பங்காற்றியவர். அந்த முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி நின்றவர். ஆனால் அதேசமயம் யதார்த்தபூர்வமாகப் பேசியவரும் கூட. உண்மையை - மனதில்பட்டனவற்றை - அரசியல் லாபம் கருதாமல் வெளிப்படையாக அப்போதே பேசியவர்.

ஒரு புறம், அந்தத் தீர்வு முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியோ, மார்க்கமோ இல்லை என்பதை எடுத்துரைத்தபடி -

மறுபுறம், கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் *'இதோ பொங்கலுக்குத் தீர்வு', 'அடுத்த வருடப்பிறப்புக்கு முன் தீர்வு', 'தீபாவளிக்குள் தீர்வு'* என்று அதீத நம்பிக்கை வெளியிட்ட சமயத்தில் கூட, இந்த முயற்சி வெற்றிபெறவே மாட்டாது என்ற யதார்த்தத்தை உரக்க ஒலித்தவர்.

*'யதார்த்தவாதி வெகுசன விரோதி'* என்பது போல அப்போதே அவர் உண்மையைப் பேசியபோது அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றார் என்று குற்றம் சுமத்தியவர்களும் உளர்.

கடைசியில் கூட்டமைப்பில் எல்லோருமே இது விடயத்தில் அவர் கூறிய கருத்து நிலைப்பாட்டுக்கே வரவேண்டியவர்களானார்கள்.

இப்போதும் அவரிடம் இதுபோன்ற ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தற்போதைய ராஜபக்ஷ அரசுடன் பேசுவதில் பயனில்லை என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்று கூறுவது குறித்து அவரிடம் வினவப்பட்டிருக்கின்றது.

*"ராஜபக்ஷ அரசுடன் பேசுவதில் பயனில்லைத்தான். ஏற்கனவே நாம் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால் ஆட்சியாளர்களுடன் பேச்சின் ஊடாக நாம் முயற்சிக்காது இருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் அது எமக்கே தீமை. எனவே எந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்தாலும் நாம் அவர்களுடன் பேசியேயாக வேண்டும். எனவே நிச்சயமாக நாம் பேச்சுக்களைத் தொடர்ந்து கொண்டே இருப்போம்"* என்று பதிலளித்துள்ள சித்தார்த்தன், இன்னொரு விடயத்தையும் உதாரணத்துடன் சுட்டிக் காட்டியிருக்கின்றார். அது கவனிக்கத் தக்கதாகும்.

1956இல் நாட்டின் தனிச் சிங்களத் சட்டத்தைக் கொண்டு வந்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா. நாட்டின் இனப்பிரச்சினையை மிக மோசமான சிக்கல் நிலைக்கும் தள்ளியவர் அவர்தான். ஆனால் அதற்காக தந்தை செல்வா, பண்டாரநாயக்காவுடன் பேச்சு மூலமான தீர்வு முயற்சியைக் கைவிடவில்லை. தொடர்ந்து பேசினார்.1958 இல் இணக்கத் தீர்வை உள்ளடக்கிய பண்டா - செல்வா ஒப்பந்தம் அப்படித்தான் உருவானது.

பேரினவாதிகள் சீற்றம் கொண்டு கிளர்ந்தமையால், அந்தப் பேரினவாதத்தைத் தூண்டி, அதில் அரசியல் குளிர் காய்ந்து, ஆட்சிப் பீடத்தை அதன் மூலம் கைப்பற்றிய பண்டாரநாயக்கா, அதே பேரினவாதத்துக்கு மண்டியிட வேண்டியவரானார். ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து மண்டியிட்டார் பண்டா.

அதனால், இனப்பிரச்சினைக்கு 1958இலேயே தீர்வு காணும் அற்புதமான வாய்ப்புத் தவறிப் போயிற்று.

தந்தை செல்வாவின் காலத்தைப் போன்று இப்போதும், ராஜபக்ஷக்களின் அரசுதான் தொடரப் போகின்றது என்றால், அதனுடன் பேசுவதைத் தவிர - ஊடாடுவதை விட - தமிழர் தலைமைக்கு மாற்று வழியோ, வேறு மார்க்கமோ உடனடியாக இருக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

ஆனால், அன்றைக்கும் இன்றைக்கும் ஒரு வேறுபாடு.

அன்று - தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த பேரினவாதியான பண்டாரநாயக்காவைத் தமிழர்களுடன் ஓர் இணக்கத் தீர்வுக்கு சம்மதிக்க வைக்க முடிந்தது. ஆனால் அதை அவரால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இன்று - பேரினவாதத்தின் உச்சியில் தமிழர்களுக்கு எந்த விட்டுக் கொடுப்பும் செய்வதில்லை என்ற மேலாண்மைத் திமிரில் கொதித்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷக்களை தமிழர்களுக்கு நியாயத் தீர்வு ஒன்றை வழங்கச் செய்வதற்கு இணங்க வைப்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலை.

ஆனால் நியாயத் தீர்வு ஒன்றுக்கு ராஜபக்ஷக்கள் தப்பித் தவறி இணங்கினால் - இணங்கச் செய்தால் - பண்டாரநாயக்கா மாதிரி ராஜபக்ஷக்கள் பின்வாங்க மாட்டார்கள் என்பதையும் -

தாம் இணங்கக் கூடிய தீர்வை தென்னிலங்கை மக்களிடம் வெற்றிகராமாக விற்பதற்கு - சந்தைப்படுத்துவதற்கு - சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு வழிகளிலும் காரிய மாற்றிச் சாதிக்கக் கூடிய தலைமைத்துவம் அவர்களுடையது என்பதையும் -

தெளிவாகவும் உறுதிபடவும் கூறமுடியும்.

இந்த வகையில் பார்த்தால் நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட, ராஜபக்ஷக்களுடன் தொடர்ந்து ஊடாட வேண்டும் என்ற சித்தார்த்தனின் கருத்து மிகவும் யதார்த்தபூர்வமானதுதான்.

# இனவிடுதலைக்காகத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து பயணிக்க விடக் கூடாது என்பதில் அரசு கவனம்

## விசனிக்கின்றார் சிவஞானம் சிறீதரன்





**(எஸ்.நிபோஜன்)**

கிளிநொச்சி, ஜூலை 20

தமிழர்கள் இனவிடுதலைக்காக ஒன்று சேர்ந்து பயணிக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் கவனமாக உள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்

நேற்று கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் இந்த நாட்டிலே மிக முக்கியமான தருணத்திலே நிற்கின்றோம். மிக நெருக்கடியான தருணத்திலே நிற்கின்றோம். காரணம் தேர்தல் வருகின்ற போதுதான் - அந்தத் தேர்தல் காலத்திலே எங்கள் கட்சியினுடைய கடந்த கால செயற்பாடுகள் மற்றும் அடுத்த 5 ஆண்டுகளிலே என்ன விடயங்களைக் கையாளப் போகின்றோம் என்ற முக்கிய விடயங்களைத் தேர்தல் களத்திலே நாங்கள் சொல்லுகின்றோம்.

அறுபது வருடங்களுக்கு முன்னர் இந்த மண் எவ்வளவு காடாக இருந்திருக்கும், இந்தப் பிரதேசம் எவ்வாறு இருந்தது, இந்தப் பிரதேசத்தில் நாங்கள் குடியேறி இதனை எவ்வாறு மாற்றி அமைத்தோம், இன்றைக்கு அறுபது ஆண்டுகள் கடந்து இந்த இடம் எப்படி மாறி இருக்கிறது, ஏன் நாங்கள் இந்த இடத்திலே குடியேறினோம், அதற்கான காரணம் என்ன?

58 க்களில் அல்லைக் கந்தளாயிலே முதன் முதலில் 156 தமிழ் விவசாயிகள் சிங்கள பொலிஸார் பார்த்திருக்க சிங்களக் காடையர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள். அதே ஆண்டுகளில்தான் அநுராதபுரம் பகுதியிலும் திருகோணமலையிலும் பெரும்பான்மையாக வாழ்ந்த எங்கள் மக்களும், மலையகப் பகுதியில் வாழ்ந்த எங்கள் இனத்தவர்களும் பலி எடுக்கப்பட்டார்கள்.

இவ்வாறு எல்லாம் கடந்து வந்த இனப் படுகொலைகளைத் தாண்டி நாங்கள் எங்களுடைய ஈழதேசத்திலே குடியேறி, நில அடையாளங்களோடு எங்களை நாங்கள் அடையாளப்படுத்திக் கொண்டோம். அந்தக் காலத்தில்தான் ஒரு பெரும் தலைவர் பிரபாகரனுக்கு கீழே ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். தந்தை செல்வாவின் வழிகாட்டலிலே அறவழிப் போராட்டங்களைத் தொடர்ந்து ஒரு ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவம் இந்த மண்ணிலே முதன்மை பெற்றிருந்தது. அதற்காகப் பல ஆயிரக்கணக்கானவர்களை இந்த மண்ணிலே விதைத்திருக்கின்றோம். பல லட்சக் கணக்கான மக்களை இழந்திருக்கின்றோம். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இவற்றை எல்லாம் இழந்துதான் இந்த மண்ணிலே ஒரு தேர்தல் மூலமாக அடுத்த வாழ்வைப் பற்றிச் சிந்திக்கின்றோம். இந்தக் காலத்திலே எங்களை இழந்து போனால் - அல்லது நாங்கள் தமிழினம் என்பதனை சொல்ல மறந்து போனால் - எமது வாழ்க்கையும் இல்லாமல் போகும் என்பதனை பலர்ங்கு விளக்கமாகச் சொன்னார்கள்

33 கட்சிகள் இருக்கின்றன. பல நூற்றுக் கணக்கானவர்கள் இங்கு போட்டியிடுகிறார்கள். இலங்கையில் இருக்கின்ற அரசியலில் எங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கூறு போட்டு, எங்களிடம் இருக்கின்ற அரசியல் பலத்தை, எங்களிடம் அடிப்படையாக உள்ள கொள்கையை, சிதைப்பதற்கான முழு முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்கிறார்கள். அந்த முயற்சிகளில் இருந்து விடுபட வேண்டுமா அல்லது நாங்கள் எங்களுடைய வாக்குக்களை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு சிதறடித்து யாரும் இல்லாத இனமாக அழிந்து போகப் போகின்றோமா என்பதைத் தீர்மானிக்க வெண்டும்.

நாங்கள் 2010 இல் அரசியலில் பயணித்த காலம் முதல் எங்கள் அரசியல் பலத்தை அழிப்பதற்காக இதே கோட்டாபய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, எமது அலுவலகத்திலே குண்டுகளைக் கொண்டுவந்து வைத்தார்கள். எமது கரைச்சி பிரதேச சபை தவிசாளரை கைது செய்து சிறையிலே அடைத்தார்கள். 13 மாதங்கள் எந்தக் காரணமும் இல்லாமல் சிறையிலே இருந்தார்கள். எமது கட்சிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிங்கக்கொடியோடு பலர் வந்து கல்லெறிந்தார்கள். உட்புகுந்து அடித்தார்கள். அலுவலகச் செயற்பாடுகளைத் தடுக்க முயன்றார்கள். சட்டரீதியாகவும் முயன்றார்கள். ஆறு தடவைகள் விசாரணைகளுக்காக நான்காம் மாடி சென்று வந்திருக்கின்றேன். ஏன் இவ்வளவும் நடந்தது? தமிழ்த்தேசியம் என யாரும் சிந்திக்கக் கூடாது, தமிழ்தேசியத்தின் கீழ் நீங்கள் யாரும் ஒன்றாக இணையக் கூடாது, தமிழர்கள் சேர்ந்து இனவிடுதலைக்காகப் பயணிக்கக் கூடாது என்பதில் சிங்கள அரசாங்கம் மிகவும் கவனமாக உள்ளது

ஆகவே, எங்களுக்கு ஒவ்வோரு தேர்தலும் போர்க்களம். எங்களிடம் இப்போது ஆயுதங்கள் இல்லை. நாங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தியவர்கள். எங்களால் முடியும். ஆனால் ஆயுதங்களை இப்போது நாங்கள் தூக்கவில்லை. ஆயுதப் போராட்டம் பற்றி நாங்கள் பேசவில்லை. அடுத்த சந்ததி துப்பாக்கி தூக்கவேண்டும் என்றும் நாங்கள் சொல்லவில்லை.

இருக்கின்றஇந்தக்காலத்திலேஎங்களுக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதற்கு சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு எங்களுக்கு மிக அவசியமானது. அதனால்தான் ஒரு பலமான சக்தியாக நாங்கள் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டிய தேவை இருக்கிறது. அந்தப் பலத்தை வாக்கின் ஊடாகத்தான் பெறமுடியும். இதனை கடந்த ஆண்டுகளில் நீங்கள் செய்திருக்கின்றீர்கள். இம்முறை இருக்கிற சிதைவுகளும் பல நெருக்கடிகளும் எங்கள் மக்களைக் கொஞ்சம் ஆட்டிப் பார்கின்றன. இது எங்களைச் சிதறடிப்பதற்கான முயற்சி என்பதனை கருத்தில் கொண்டு கடந்த முறை வழங்கிய ஆணையை மேவிய ஆணையை இம் முறை நீங்கள் தரவேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன். - ஷஎன்றார் அவர்.

இந்தப் பிரச்சாரக் கூட்டமானது தர்மபுரம் பகுதியில் மாலை 5மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேட்பாளர்களான சிவஞானம் சிறீதரன், சுமந்திரன் ஆகியோரும், வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை, பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், தமிழரசுக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஜெயக்குமார், கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதி இரத்தினமணி, கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்

## நீர்க் கட்டணத்துக்குச் சலுகை; டிசம்பர் வரைத் துண்டிப்பில்லை

நீர்க் கட்டணத்தைச் செலுத்தாத பாவனையாளர்களின் நீர் விநியோகத்தை இந்த வருட இறுதி வரை துண்டிக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

வீட்டுப் பாவனையாளர்களுக்கு மாத்திரமே இந்தச் சலுகை வழங்கப்படும் என்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இவ்வருடம் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பாரியளவில் நீர் கட்டணம் அதிகரித்துள்ளது எனப் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதையடுத்து இந்தச் சலுகையை அரசு வழங்கியுள்ளது.

## தந்தையைக் கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலைசெய்த மகன்

*தந்தையை மகன் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொன்ற கொடூர சம்பவம் சிலாபத்தில் இடம் பெற்றுள்ளது.*

*தாக்குதலுக்கு இலக்கான தந்தை படுகாயங்களுடன் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*சம்பவத்தில் 39 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். கொலையாளியான அவரின் 17 வயதுடைய மகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

# தோல்விப் பயத்தில் உளறுகிறது எதிரணி

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் எதையும் பிரயோகிக்கவில்லை என்று மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

எதிர்க்கட்சிகள் தோல்விப் பயத்தில் கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி பொதுத்தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைக்குமாறு உளறுகின்றார்கள். கொரோனாவால் பொதுத்தேர்தல் ஏற்கனவே இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. மூன்றாம் தடவையும் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், கொரோனாவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. தேர்தலை குறித்த திகதியில் நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எவ்வித அழுத்தங்களையும் நாம் பிரயோகிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் போலியான குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றோம்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிரணிகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்கும்போது அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனாவின் தாக்கம் இம்மாதம் முடிவதற்குள் மீண்டும் அதிகரித்தால் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுதான் முடிவெடுக்க வேண்டும்.



ஆனால், அப்படியான நிலைமை ஏற்படாது. சுகாதாரப் பிரிவினரும் முப்படையினரும் களத்தில் முழு மூச்சுடன் செயற்படுகின்றார்கள்.

கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது என்று எதிரணிகள் பொய்யுரைக்கின்றார்கள். சுகாதார அமைச்சு இந்தக் கருத்துக்களை நிராகரித்துள்ளது.

பாதுகாப்பு நிமித்தம் வடக்கு உட்பட நாடெங்கும் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களினால் தேர்தல் பணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேர்தல் சுதந்திரமாக நடைபெறுவதற்காக எம்மாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கி வருகின்றோம் – என்றார்.

## சுகாதார முறைகளை பின்பற்றாத 3,061 பேர் மேல் மாகாணத்தில் கைது

மேல் மாகாணத்தில் முகக் கவசம் அணியாமலும் சமூக இடைவெளி பின்பற்றாமலும் வெளியில் திரிந்த 3 ஆயிரத்து 61 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை தொடர்பில் 2 ஆயிரத்து 93 பேரும், சமூக இடைவெளியைப் பின்பற்றாமை தொடர்பில் 968 பேரும் இவ்வாறு எச்சரிக்கப்பட்டு விடுக்கப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலான காலப்பகுதியினுள் மேல் மாகாணத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 771 பேரும், ஊழல் வழக்கு தொடர்பில் 792 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தவறான முடிவு எடுத்த மாணவி

(ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**யாழ்ப்பாணம் நகரில் உள்ள ஒரு பிரபல பெண்கள் பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி உறவுகளுக்குத் தெரியாது இரகசியமான முறையில் பதிவு திருமணம் செய்த பின்பும் கல்வியை தொடர்ந்த நிலையில் கணவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.**

**பிரபல பெண்கள் பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவி எவருக்கும் தெரியாது கடந்த ஆண்டு பதிவுத் திருமணம் செய்துள்ளார். அவ்வாறு பதிவுத் திருமணம் இடம்பெற்றபோதும் கல்வியை தொடர்ந்த மாணவி 10 மாதங்களாகக் கணவனோடு வாழ்ந்தபோதும் குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக கடந்த இரு மாதங்களாகப் பிரிந்து தாய் வீட்டில் தங்கியிருந்தார். எதிர்வரும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கல்வி நிலையத்திற்கு சென்று வரும் சமயம் கணவர் வழியில் மறித்து சர்ச்சையில் ஈடுபட்டார் என்று கூறப்படுகின்றது. இதனையடுத்து நேற்று முன்தினம் அம்மாணவி தூக்கில் தொங்கித் தற்கொலை புரிந்த அவலம் இடம்பெற்றுள்ளது.**

**இந்த மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார்.**

# பேரினவாத 'ஏஜெண்டு'களின் வலையில் விழுந்து வாக்குகளை நாசமாக்கி விடாதீர்!

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் வேண்டுகோள்

சிறுபான்மை சமூகத்தின் இருப்பையும் பாதுகாப்பையும் நிர்ணயிக்கும் தேர்தலாக இந்தப் பொதுத்தேர்தல் இருப்பதால், பேரினவாத ஏஜெண்டுகளின் வலையில் விழுந்து வாக்குகளை நாசமாக்கி விட வேண்டாம்.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

மன்னார், எருக்கலம்பிட்டியில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் காரியாலயத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

சிறுபான்மைத் தலைமைகளைப் பாதுகாக்கும் தேவை இப்போதைய காலகட்டத்தில் இருக்கின்றது. அடுத்த நாடாளுமன்றுக்கு பேசாமடந்தைகளும் பொம்மைகளுமே வரவேண்டுமென அதிகார வர்க்கம் எதிர்பார்க்கின்றது. அதற்கு நீங்கள் சோரம்போய் விடக்கூடாது.

இந்த அரசு பதவிக்கு வந்ததிலிருந்து, நமது சமூகத்துக்கு நடந்தவைகளும், நடந்துகொண்டிருப்பவைகளும் நான் சொல்லி நீங்கள் தெரிய வேண்டியது இல்லை. ஜனாஸா எரிப்புத் தொடர்பில், அரசும் அரச இயந்திரமும் நடந்துகொண்ட முறை உங்களுக்குத் தெரியும். எம்மைச் சீண்ட வேண்டும், கோபத்துக்குள்ளாக்க வேண்டும், பழிவாங்க வேண்டும், எமது உள்ளங்களை நொருக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்துக்காகவே, சர்வதேச விதிமுறைகளையும் மீறி, எமது ஜனாஸாக்களை கண்முன்னே எரித்தார்கள். இதன்மூலம் அவர்கள் இன்பம் காண்கிறார்கள். அதுமாத்திரமின்றி, இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள



ஆதரவுத் தளத்தையும், பேரினவாதிகளுடனான நெருக்கத்தையும் தமக்குப் பெற்றுத்தருமென பெரிதும் நம்புகின்றார்கள். இதுதான் யதார்த்தம்.

பேரினவாதக் கூலிகளுக்கு நீங்கள் வாக்குகளை வழங்கினால், அது சமூகத்தை ஆபத்துக்குள் தள்ளும். பாதிப்பை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் சமுதாயத்தில் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். எனவே, வரப்போகும் நாடாளுமன்றத்தில் சமூகத்துக்கான குரல்கள் ஒலிக்க வேண்டும். அதற்கான உங்கள் வாக்குகளை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

பயங்கரவாதத்துடன் என்னையும் எனது குடும்பத்தையும் வேண்டுமென்று முடிச்சுப்போட்டு, சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றனர். எனது சகோதரரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, மூன்று மாத காலம் காரணமில்லாமல், தடுப்புக் காவலில் வைத்திருப்போர், இப்போது என்னையும் சிறையில் தள்ள முயற்சிக்கின்றனர். மிக உச்சளவில் எனக்கு துன்பம் தருகின்றார்கள். எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்கொள்ளாத கஷ்டங்களை நான் அனுபவிக்கின்றேன். என்னைப் பாடாய்ப் படுத்துகின்றார்கள். விசாரணைக்கு அழைத்துவிட்டு, தேவையற்ற கேள்விகளையும் சம்பந்தமில்லாத விடயங்கள் பற்றியும் துருவித்துருவிக் கேட்கின்றார்கள். பெரிய குற்றவாளியை விசாரிப்பது போன்று, ஊடகங்கள் மூலம் கதை பரப்புகின்றார்கள்.

பதினைந்து மாதங்களாக எல்லா விசாரணைகளும் நடந்து முடிந்த பிறகும், தேர்தல் நெருங்கும்போது, இவ்வாறு என்னை மட்டும் திரும்பத் திரும்ப விசாரிப்பதேன்? எமது வெற்றியைத் தடுப்பதும், கட்சியை அழிப்பதும் அதன்மூலம், சமுதாயத்துக்கான எனது குரலை நசுக்குவதுமே அவர்களின் திட்டமாகும் என்று தெரிவித்தார்.

காப்புக்கருவிகள் மற்றும் சாதனங்கள்




3PLY Mask- 25/-
5PLY KN95 Mask- 275/-
Child KN95 Mask- 360/-



| Hand Sanitizer Gel,Liquid | High Quality Hand Wash | Disinfectant Liquid |
|---|---|---|
| 50ml. 165/- | 200ml. 175/- | 1Litter.750/- |
| 100ml. 265/- | 500ml. 245/- | 3Litter.2200/- |
| 200ml. 375/- | 1Litter. 350/- | 5Litter.3600/- |
| 500ml. 485/- | 4Litter. 1100/- | |
| 5Litter. 3950/- | | |

condition apply

NORTH LEAD DISTRIBUTORS #253, Stanly Road, Jaffna

அழையுங்கள்
0774192275
0772533390

காலைக்கதிர்
Kalaikkathir

# போர் முடிந்த பின்னரும் தமிழ் மக்களாகிய நாம் உயிரோடும் உயிர்ப்போடும்தான் இருக்கின்றோம்

## அந்தச் செய்தியை சர்வதேசத்துக்கும் திரும்பவும் ஒகஸ்ட் 5 இல் சொல்வோம் என்கிறார் சுமந்திரன்

**போர்** முடிந்த பின்னர், தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல், வாக்குப் பலத்தால் தொடர்ச்சியாக நாங்கள் இன்னமும் உயிரோடும் – உயிர்ப்போடும் தான் இருக்கின்றோம், எங்கள் நிலைப்பாட்டில் எள்ளவும் மாற்றமில்லை,நாங்கள் ஒரு மக்கள் கூட்டம், எங்களுக்கு ஓர் நிரந்தரமான தீர்வு வேண்டும், எங்களுக்கும் இறைமை உண்டு, அதன் அடிப்படையில் ஆட்சி முறையைத் தேர்த்தெடுப்பதற்கு சுய நிர்ணய உரித்துண்டு என்ற தீர்ப்பு மக்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்றத் வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பூநகரியில் வெள்ளி மாலை இடம்பெற்ற பிரமாண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் –

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட சபைகளில் பூநகரிப் பிரதேச சபையே அனைத்து வட்டாரங்களையும் முழுமையாகக் கைப்பற்றி கூட்டமைப்புக்குப் பெருமை சேர்த்த சபையாக இருந்தது.

70 வருட காலமாக நாங்கள் ஒரு ஜனநாயகத் தீர்ப்பை தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். எங்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்டு , கட்சியின் நிலைப்பாடு வரையறுக்கப்பட்டு , 1951ஆம் ஆண்டு, இறைமையின் அடிப்படையில் – மக்களின் ஜனநாயகத் தீர்ப்பின் அடிப்படையில் – நாங்கள் மக்களாக வாழத் தகுதி பெற்றவர்கள், ஆகையினால் ஓர் சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறை ஒன்று ஆக்கப்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாநாடு தீர்மானித்தது.

அந்த தீர்மானத்துக்கு ஆதரவாக முதலாவது பொதுத் தேர்தலிலே, அதாவது 1952ஆம் ஆண்டு எங்களுடைய மக்கள் வாக்களிக்கவில்லை. ஆனால் மிக விரைவாக இந்தக் கட்சியின் கோட்பாடு என்ன? நாங்கள் சொல்லுவது என்ன? என்பதை மக்கள் புரிந்துகொண்டு 1956ஆம் ஆண்டில் இருந்து இன்று வரைக்கும் – இடைவிடாது எந்தவித சலனமும் இல்லாமல் – சமஷ்டிக்குக் குறைவான எந்தத் தீர்வுக்கும் எமது மக்கள் வாக்களித்தவகள் அல்லர். ஒருதடவை 1977 ஜூலையில் தனி நாட்டுக்காகவும் வாக்களித்தார்கள்.

ஆனால் சமஷ்டிக்குக் குறைவான ஒரு தீர்வை எமது மக்கள் எந்தக் காலத்திலும் அங்கீகரித்தது கிடையாது. அந்த நாள்களிலே 1970வரைக்கும் சமஷ்டியை கேலி பண்ணியவர்கள் – ஐம்பதுக்கு ஐம்பது என்று சொல்லி எல்லாவற்றையும் கோட்டை விட்டவர்கள் – சமஷ்டியைப் பற்றி பலவிதமான கேலிப் பேச்சு பேசியவர்கள் இன்று தாங்கள்தான் சமஷ்டியைப் பெற்றுத் தருவோம் என மக்கள் முன்பாகச் சொல்லித் திரிகிறார்கள் .

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது எங்களுடைய கட்சி ஒரு தேர்தல் அறிக்கையை விஞ்ஞாபனமாக வெளியிட்டது. அதை ஒட்டி நாங்கள் பயணித்துக்கொண்டிருந்தோம். அந்தக் காலத்திலே திடீர் எனக் குத்துக் கரணம் அடித்து தன்னைவிட வேறு தேசியவாதி கிடையாது என்று மக்களுக்கு தன்னைக் காண்பிக்க முற்பட்ட முன்னால் முதலமைச்சர் 2013 ஆம் ஆண்டு நான் போட்டியிட்ட அறிக்கையின்படியே நான் செயல்படுவேன் என திரும்பத் திரும்ப சொன்னார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கைதான் எனது நிலைப்பாடு எனக் கூறியவர் இன்று எமக்கு எதிராக ஓர் அணியை உருவாக்கிப் போட்டியிடுகின்றார்.

அதனால்தான் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பிறகு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் யுத்தத்திலே இவர்களை நாங்கள் முறியடித்து விட்டோம், இவர்களை தோற்கடித்து விட்டோம் என்றனர். இவர்களை என்று, தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் அவர்கள் சொல்லவில்லை. தமிழ் மக்களையும் குறித்துத்தான் சொன்னார்கள். அதனால்தான் பளையில் இருந்த இராணுவச் சோதனைச் சாவடி அருகில ’இனி ஒரு நாடு: ஒரு மக்கள்’ என்று பொறிக்கப்பட்டிருந்தது.

அதாவது, இனி வெவ்வேறு இனங்கள் கிடையாது. வெவ்வேறு மக்கள் இந்த நாட்டிலே இல்லை. எல்லாரும் ஒரே மக்கள்தான். அது, சிங்கள பௌத்தர்கள்தான். மற்றையவர்கள் வேண்டுமானால் வாழலாம். ஆனால் பெரும்பான்மையினருடைய விருப்பப்படிதான் ஆட்சி நடக்கும் என்ற மமதையோடு வெளிப்படையாக அவர்கள் சொன்ன போதும் கூட அதை மறுதலித்து, எமது மக்கள் தொடர்ச்சியாகத் தங்கள் வாக்குகள் மூலம் எல்லாத் தேர்தல்களிலும் அந்த கூக்குரலை முறியடித்தார்கள்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலே கூட எய்தவனுக்கு எதிராக – அவன் பாவித்த அம்புக்காக – வாக்களித்தவர்கள் எங்களுடைய மக்கள். தொடர்ச்சியாக சளைக்காமல் என்னவெல்லாம் நடந்தாலும் கூட அந்த ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு 22015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து அந்த ஆட்சியை மாற்றியவர்கள் எங்களுடைய மக்கள்.

அந்த ஆட்சி மாற்றப்பட்ட அன்றிரவு மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து இரு உலங்கு வானூர்திகளில் வெளியேறிப்போய் தங்காலையில் உள்ள தனது வீட்டிலே மக்கள் சூழ இருக்கும் சமயம் ஜன்னல் ஒன்றில் ஏறி நின்று அவர் சொன்ன வாசகங்களை நாம் மறக்க முடியாது. இந்தத் தோல்விக்குக் காரணம் ஈழ வாக்குகள் – ஈழத்தின் வாக்குகள்தான் என்னை தோற்கடித்தன என்று சொன்னார். எவ்வளவு பெரிய வெற்றி எங்களுக்கு? அப்படியாக அவரே உணர்ந்திருந்தார். எந்த மக்களை நான் தோற்கடித்தேன் – எந்த மக்கள் இனிமேல் தலை தூக்க முடியாது, அவர்களின் அரசியல் அபிலாசைகள் எனச் சொல்வதெல்லாம் எடுபடாது, நான் தகர்த்து விட்டேன் எனக் கூறியவரை நாங்கள் தங்காலைக்கே அனுப்பினோம்.

அதை தொடர்ந்து ஓர் ஆட்சியை உருவாக்கினோம். அந்த ஆட்சியின் மூலமாக நீண்டகால அரசியல் பயணத்தை நிறைவுக்குக் கொண்டு வர நாம் முயற்சி எடுத்தோம். அந்த முயற்சி எம் கண்முன்னே, இன்னும் முன் கொண்டு செல்ல வேண்டிய முயற்சியாக இருக்கின்றது. அது முக்கியமான முயற்சி. ஏனென்றால் இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டோடு ஓர் வரைவை தயாரித்திருக்கின்றோம். சிங்கள மக்கள் மத்தியில் அதை கொண்டு சென்று அதற்காக பேசியிருக்கின்றோம். சிங்கள மக்களும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.



முன்னைய காலத்திலே இரவிராஜ் சிங்கள மக்களிடத்திலே எமது நியாயத்தை எடுத்துச் சென்றார். அந்த முக்கியமான பணியை செய்தமைக்காகத்தான் அவர் கொல்லப்பட்டார். முதல் நாள் இரவு 10 மணி வரை எனது அலுவலகத்திலே இருந்தவர். அதாவது, அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் என்னோடு கலந்துரையாடலில் இருந்தார்கள். ஏனையவர்கள் சென்றபோதும் இந்த ஏ9 வீதியை திறக்க ஓர் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என என்னுடன் வாதாடினார். பின் 10.30 மணியளவில் எனது வீட்டில் இருந்து சென்றார். மறுநாள் காலை 8 மணியளவில் அந்தத் துயரச் செய்தி வந்தது.

நான் அரசியலுக்கு வந்த பின்பு ஒரு தடவை சிங்களத்தில் பேசிய சமயம் நீங்கள் உங்கள் பாதுகாப்பில் கவனமாக இருங்கள் என்று விக்கிரமபாகு கருணாரட்னா எனக்குத் தெரிவித்தார். ஏனெனில் இரவிராஜ் கொல்லப்பட்டது அதற்காகத் தான் என்றார். தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களிடம் சென்று எவ்வளவு வீராப்பாகப் பேசினாலும் அது அங்கே எந்தத் தாக்கமும் செலுத்தாது. ஏனெனில் அவர்கள் எதையும் கத்திவிட்டு போகட்டும், நாட்டில் நாம் எங்களது கோரப் பிடியை வைத்திருப்போம் என்ற மமதையில் செயற்படுபவர்களுக்கு, (அவர்களுக்கு) வாக்களிப்போர் மத்தியில் சென்று நியாயங்களை எடுத்துச் சொன்னால் அது அவர்களைத் தாக்கும். அப்போது எமது மக்களையே திசை திருப்பப் பார்க்கின்றார்கள் என்ற யோசனை வரும்.

1926ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர். பண்டாரநாயக்காதான் சமஷ்டி என்ற சிந்தனையை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தியவர். ‘சிலோன் மோனிங்’ என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆறு கட்டுரைகளை எழுதினார். அதற்கும் அப்பால் தமிழ்த் தலைவர்கள் ஏற்கவில்லை என்பதனால் யாழ்ப்பாணம் வந்தும் ஒரு பேருரை நிகழ்த்தினார். சமஷ்டிதான் பொருத்தமான தீர்வு எனக் கூறினார்.

அன்று எங்களுடைய தலைவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை . டொனமூர் ஆணைக்குழு முன்பாக – சோல்பரி ஆணைக்குழு முன்பாக – கண்டியத் தலைவர்கள் சமஷ்டி வேண்டும் எனக் கேட்டார்கள். நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று சிங்கள மக்கள் மத்தியிலே சமஷ்டி என்றால் பிரிவினை என்று பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகின்ற போது இந்த உண்மைகளை நாம் அவர்களிடம் சொல்ல வேண்டும் – உங்களுடைய தலைவர்கள் தான் இதனை அறிமுகப்படுத்தியவர்கள் என்று.

சிங்கள மக்களுக்குப் பாதகமானதை அவர்கள் செய்திருக்க முடியாது என்பதனை சொல்ல வேண்டும். அந்த உண்மைகளைச் சொல்லும் பணியை செய்தே ஆக வேண்டும். இந்த நாட்டிலே அரசியல் தீர்வு ஏற்படுவதாக இருந்தால் இந்த நாட்டை பிரிக்க முனையவில்லை,

( 10 ஆம் பக்கம் பார்க்க...)



தொகுப்பு:- ந.லோகதயாளன்.



# கூட்டமைப்பைப் பதியத் தமிழரசு தவறியதாலேயே 'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி' - உருவாகியது

## விளக்குகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



தமிழ் மக்கள் தேசிய கூட்டணியை உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஆகும். கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று கடந்த 15 வருட காலமாக நான் போராடினேன். அது முடியவில்லை. தமிழரசுக் கட்சியே அதனுள் ஆதிக்கம் செலுத்துகிறது. தமிழரசுக் கட்சியின் முடிவுகளுக்கு ஏனைய பங்காளிக் கட்சிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றார்கள். எம்மால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனாலேயே நாங்கள் கூட்டமைப்பை விட்டு வெளியேறினோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமாகிய சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் பத்திரிகையின் தேர்தல் வியூகம் பகுதிக்காக அவரைத் தொடர்பு கொண்டு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் உருவாக்கம் பற்றி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடனான செவ்வியின் போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, அவர் அளித்த பதில்களை அப்படியே தருகிறோம்.

**கேள்வி:-** கொவிட் 19 நெருக்கடி நிலைமையில் உங்கள் கட்சிசியின் பிரச்சார நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன. ?

**பதில்:-** ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்தல், கொவிட் 19 நெருக்கடியினால்ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை காணப்படுவதாக புதிய திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின் சகல கட்சிகளும் தேர்தல் பிரசாரங்களில் இறங்கியுள்ளன. தபால்மூல வாக்களிப்புக்கள் ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு சாதகமான கள நிலைவரங்கள் காணப்படுகின்றன என நாம் அறிகின்றோம். எமது கூட்டணி அதிகப்படியான ஆசனங்களை பெற்றுக் கொள்ளும் என நம்புகின்றோம்.

**கேள்வி:-** தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் உருவாக்கம் பற்றி ........ ?

**பதில்:-** தமிழ் மக்கள் தேசிய கூட்டணியை உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் கூட்டமைப்பினைப் பதிவுசெய்வதற்குத் தயராக இருக்கவில்லை. அதனைப் பதிவு செய்ய வேண்டும் என 15 வருடகாலமாக போராடினேன். ஆனால் கூட்டமைப்பினைப் பதிவு செய்ய மறுத்து விட்டார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் தேர்தல் காலங்களில் தமிழரசுக் கட்சி என்ற பெயரிலும், தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்திலும் போட்டியிட வேண்டும் என்றே விரும்பினார்கள். அதன மூலம் தமிழரசுக் கட்சியினை ஆதிக்கம் நிறைந்த கட்சியாகத் தக்க வைக்க முனைந்தார்கள். தமிழரசுக்கட்சி எடுக்கின்ற முடிவுகளுக்குப் பங்காளிக் கட்சிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றார்கள். இது எமக்கு ஏற்புடையதாக அமையவில்லை. முதலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறியது. அதன் பின்னர் அனந்தி சசிதரன் வெளியேறினார். பின்னர் சி.வீ. விக்னேஸ்வரன் வெளியேறினார். சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோர் வெளியேறினர். வெளியேறிய அனைவரும் இணைந்து உருவாக்கியதே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி.

**தேர்தல் வியூகம்**
செவ்வி கண்டவர்கள் :
பி.டிலக்ஸன்,
இ.கலையமுதன்

**கேள்வி:-** தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கணிசமான ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றம் செல்கின்ற போது எவ்வாறான நடைமுறைசார் வேலைத்திட்டங்களை மேற்கொள்வீர்கள்?

**பதில்:-** எங்கள் இருப்புக்களை பாதுகாத்தல். வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்தது நிறுத்துதல். அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகின்றது, சர்வதேச ரீதியாக அழுத்தங்களைப் பிரயோகித்து எவ்வாறான தீர்வை பெற முடியும் என்பவை பற்றி இந்தியாவோடும் ஏனைய நாடுகளோடும் இணைந்து செயற்பட்டு தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வினை (காணி, பொலிஸ் அடங்கலாக) பெற்றுக்கொள்ளத் தீவிரமாகச் சிந்திப்போம்.

**கேள்வி:-** வடக்கு அரசியலையும், கிழக்கு அரசியலையும் ஒன்றாகப் பார்க்க முடியுமா?

**பதில்:-** வடக்கோடு ஒப்பிடுகையில் கிழக்கு அரசியல் நடவடிக்கைகள் வித்தியாசமானவை. கிழக்கு மாகாண சபையை எங்களுடைய எதிர்ப்புகளையும் மீறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லீம்காங்கிரஸுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்தது. இதனால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கை ஓங்கியது. தமிழ் மக்களுக்கு உரித்தான வேலைவாய்ப்புக்கள் முஸ்லிம் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. அது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய விரக்தியினை உரு வாக்கியிருக்கிறது. இந்த விரக்தியினைப் பலர் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக பிள்ளையான், கருணா போன்றோர் கையாளத் தொடங்கிவிட்டார்கள்.

தேர்தல் ஒருபுறம் இருக்க, எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு அமைப்புகளை இணைத்துத் திட்டமிடப்பட்ட வகையில் எமது இனத்தின் இருப்பை உறுதிசெய்ய வேண்டும். கிழக்கில் எமது கட்சியும் போட்டியிடுகின்றது. திருகோணமலையில் எமக்கும் கூட்டமைப்பிற்கும் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கிறேன்.

> கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எந்தவித விட்டுக் கொடுப்புகளுக்கும் தயார் இல்லாத நிலையிலே உள்ளார். யாருடனும் கூட்டு வைப்பதற்கும் அவர் தயாராக இல்லை. அவருடன் பேசிப் பயன் இல்லாததால் நாங்கள் பேசவில்லை.

> சிறிதரனின் நாக்கில் சனி நின்று பேசுகிறது. நிச்சயமாக அவர் 75 கள்ள வாக்குகளைப் போட்டிருக்க மாட்டார். அவர் தன்னுடைய வாக்கை போட்டாரா என்பது கூட சந்தேகமே.

**கேள்வி:-** தமிழ் பிரதிநிதித்துவம் அரிதாக உள்ள கிழக்கின் சில மாவட்டங்களில் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் பிரிந்து தேர்தலில் போட்டியிடுவதால் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதனை பற்றி ஏன் நீங்கள் அக்கறை கொள்ளவில்லை?

> திருகோணமலையில் த.தே.கூ. தலைவர் சம்பந்தன் விட்டுக் கொடுப்புகளுக்கு தயாராக இல்லாத நிலையில், வேறு வழியின்றி நாங்களும் போட்டியிடுகின்றோம். எமக்கும் கூட்டமைப்பிற்கும் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கிறேன்.

**பதில்:-** நாங்கள் திருகோணமலை, அம்பாறை என்பவற்றில் ஏதாவொரு இடத்தைத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு விட்டுத் தாருங்கள், இதனால் அரிதாக உள்ள தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படும் என கோரியிருந்தோம். அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. விட்டுக் கொடுப்பதற்குக் கூட்டமைப்பினர் தயாராக இல்லை. எனினும் அம்பாறையில் தமிழர்கள் 16 வீதமாக இருப்பதனால் கள நிலைவரங்களின் அடிப்படையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் நாங்கள் போட்டியிடவில்லை. திருகோணமலையில் நாங்கள் வெற்றிபெறுவதற்கான சூழ்நிலை காணப்பட்டது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விட்டுக் கொடுப்புகளுக்கு தயாராக இல்லாத நிலையில் நாங்கள் வேறு வழியின்றி போட்டியிடுகின்றோம்.

**கேள்வி:-** தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றீடாகக் களம் இறங்கிய கட்சிகளுடன் கிழக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் அரிதாக உள்ள இடங்களில் கூட்டணி தொடர்பில் பேசவில்லையா?

**பதில்:-** கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எந்தவித விட்டுக் கொடுப்புகளுக்கும் தயார் இல்லாத நிலையிலே உள்ளார். யாருடனும் கூட்டு வைப்பதற்குத் தயாராக இல்லை. அவருடன் பேசி பயன் இல்லாததால் நாங்கள் பேசவில்லை.

**கேள்வி:-** கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் சுரேஷ் பிறேமசந்திரன்மூன்றுகூட்டணிகளைஉருவாக்கியுள்ளார். சுரேஷ் பிரேமசந்திரனு டைய கூட்டணி நிலையானதாக இல்லாதற்கான காரணம் என்ன?

**பதில்:-** உள்ளாட்சித் தேர்தல் என்பது கிராமிய மட்ட தேர்தல் ஆகும். தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தேர்தல் அல்ல. உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிட விரும்பியிருந்தோம். ஆனால் அவர்கள் பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தயாராக இல்லை. சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. சைக்கிள் சின்னம் எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்கவில்லை. வன்னி மாவட்டதிலோ கிழக்கிலோ பிரபலமானதாக இருக்கவில்லை. இதனால் நாங்கள் அவர்களுடன் போட்டியிட விரும்பவில்லை. இதனாலேயே உதயசூரியன் சின்னத்தை தீர்மானித்தோம். எனவே நாம் கொள்கையை மாற்றிக் கொண்டு செல்பவர்கள் அலற்ர.

**கேள்வி:-** சுரேஷ் பிறேமச்சந்திரன் இந்தியாவின் நிகழ்சி நிரலில் செயற்படுகிறார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்சியாகக் குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றார். இது தொடர் பாக உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** கஜேந்திரகுமாரே அப்படிக் கூறுகின்றார். மக்கள் எந்தவொரு இடத்திலும் இவ்வாறான குற்றச்சாடுகளை முன்வைக்கவில்லை. கடந்த யுத்த காலங்களில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளில் பல சர்வதேச நாடுகள் தலையிட்டு மத்தியஸ்தம் மேற்கொண்டன. மத்தியஸ்த நடவடிக்கைகளில் முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்த எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இந்தியாவிற்கு செல்வார். அந்தளவிற்கு இந்தியாவின் இணக்கப்பாடு தேவையாக இருந்தது. ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், எமக்கு அருகில் 130 கோடி சனத்தொகையைக் கொண்ட பிரம்மாண்டமான நாடு ஒன்று உள்ளது. எமது செயற்பாடுகள் 130 கோடி சனத்தொகையைக் கொண்ட நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் அமைவதையே இந்தியா விரும்பும். 130 கோடி சனத்தொகையைக் கொண்ட, மிகப்பெரிய சந்தை வாய்புக்களை கொண்ட நாட்டை எதிர்த்து யாரும் எம்முடன் நேசக்கரம் நீட்ட போவதில்லை. இந்தியா எங்களுக்காக பேச்சுக்களை ஆரம்பித்தால் பல மூன்றாம் நாடுகள் எமக்காக பேச்சுக்களை ஆரம்பிக்கும். அந்த நிலையில் இந்தியாவை எதிர்த்து செயற்பட முடியும் என்பது முட்டாள் தனம்.

(9 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலில் ராஜபக்ஷ அரசை படுகுழிக்குள் தள்ளுவோம்!

## அநுராதபுரத்தில் ரணில் அறைகூவல்



அநுராதபுரத்தில் நடைபெற்ற தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்று கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

**கொழும்பு, ஜூலை 19**

**நாட்டின் பொருளாதாரத்தைப் படு குழிக்குள் தள்ளிய ராஜபக்ஷ அரசையும் இந்தப் பொதுத்தேர்த லில் நாம் படுகுழிக்குள் தள்ளவேண்டும். அப்போதுதான் படுகு ழிக்குள் தள்ளப்பட் டிருக்கும் பொருளாதாரத்தை நாம் இலகு வாக மீட்டெடுக்க முடியும்.**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் என்பது ஒரு நாட்டின் அரசைத் தெரிவு செய்வதற்கான தேர்த லாகும். அவ்வாறெனில் அதில் போட்டி யிடுகின்ற கட்சிகள் தமது கொள்கைக ளைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எனினும், இம்முறை பொதுத்தேர்தலுக்கான கொள் கைப் பிர கடனத்தை எமது கட்சியே முதலில் வெளியிட் டிருக்கின்றது.

அதேவேளை, சுயதேவைப்பூர்த்தியை அடைந்த நாட்டை உருவாக்கு வோம் என்று ஆளுந்தரப்பு கூறி வருகின்றது. ஏற்கனவே எமது நாடு பல் வேறு உண வுப்பொருள் உற்பத்திகளி லும் சுயதேவைப்பூர்த்தி அடைந்த நாடா கவே இருக்கின்றது. ஆனால், அத னால் மாத்திரம் மக்களின் ஏனைய அனைத் துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கி விட முடியுமா? எனவே தான் மக்களின் பொருளாதாரப் பிரச்சி னைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற் கானதிட்டங்களையும் எமது கொள்கைப்பிரகடனத்தில் உள்ளடக்கியிருக்கும் அதேவேளை, எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் சுமார் 500 மில்லியனால் அதி கரிக்கப்போகும் இந்து சமுத் திரப் பிராந்திய நாடுகளின் சனத் தொகைக்கு உணவை வழங்கக்கூடிய வகை யில் தூரநோக்குடனான உற்பத்தியை ஊக்குவிப் பதற்கும் திட்டமிட்டி ருக்கின்றோம்.

அதற்கேற்றவாறு உணவு உற்பத்தியில் ஈடுபடு பவர்களுக்கான காணிக ளைப் பெற்றுக்கொடுத்தல், ஏனைய ஆரம்பகட்ட வசதிகள் மற்றும் ஒத்து ழைப்புக் களை வழங்கல், நாடளாவிய ரீதியில் பெருமளவான களஞ்சியசாலை களை நிறுவுதல் போன்றவற்றைப் பொதுத்தேர்தலின் ஊடாக நாம் ஆட்சி யமைக்கும் பட்சத்தில் செய்வதற்கு எதிர் பார்த்திருக்கிறோம். அது மாத்திரமன்றி அடுத்த வருடத்திலிருந்து நாட்டுக்கு சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதற் கான விசேட திட்டமொன்றையும் செயற் படுத்தவும் இருக்கின்றோம்.

வரலாற்றைப் பொறுத்தவரை எமது நாட்டை வேறு கட்சிகள் படுகுழிக்குள் தள்ளியபோதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டையும், பொருளாதாரத் தையும் மீட்டெடுத்து வந்திருக்கின்றது. அதற்கேற்பவே இம் முறையும் எம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி, படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற் கான செயற் றிட்டத்தை முன்வைத்திருக்கின்றோம்.

எனவே, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மக்களும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நாட்டின் பொரு ளாதாரத்தைப் படுகுழிக்குள் தள்ளிய ராஜபக்ஷ அரசையும் இந்தப் பொதுத் தேர்தலில் நாம் படுகுழிக்குள் தள்ள வேண்டும். அப்போதுதான் படு குழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை நாம் இலகுவாக மீட்டெடுக்க முடியும் - என்றார்.

---

## முன்னாள் எம்.பி கைது!

முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் நிமல் ஆர்.பீரிஸை தலங்கம பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

113,460 ரூபா பெறுமதியான தபால் கட்டண முறைகேடு விவகாரத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை நீதிவான் நீதிமன்றம் பிறப் பித்த பிடியாணையைத் தொடர்ந்து சந் தேக நபர் கைது செய்யப்பட்டார்.

## புள்ளடியிட்ட வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்த ஆசிரியர்

### மூதூர் பொலிஸாரால் வழக்கு

திருமலை, ஜூலை 19

புள்ளடியிடப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டை தனது அலைபேசியில் புகைப்படம் எடுத்த, மூதூர் கல்வி வலயத்துக்குரிய பாடசாலையொன்றின் ஆசிரியருக்கு எதி ராக நாளை மூதூர் நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதென, மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதம் 15ஆம் திகதி தபால்மூல வாக்களிப்புக்காக மூதூர் கல்வி வலய அலுவலகத்துக்கு வருகை தந்த ஆசிரி யர், வாக்களிப்பின் பின்னர் அச்சீட்டைப் புகைப்படம் எடுத்துள்ளார். இதனைய டுத்து அவரின் அலைபேசியைத் தேர் தல் அதிகாரிகள் பொறுப்பேற்று, மேலதிக விசாரணைகளுக்காக மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தனது மகன் வாக்களிப்பு என்றால் என்ன என்பது குறித்து, விசாரிப்பதால் அவருக்கு விளக்கமளிப்பதற்காகவே வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்துள்ள தாக அந்த ஆசிரியர் அதிகாரிகளிடம் தெரி வித்துள்ளார். எனினும் வாக்குச் சீட்டை வைத்திருத்தல், அதனைப் புகைப்படம் எடுத்தல் என்பன 1981 இலக்கம் 1 என்ற நாடாளுமன்றத் தேர்தல் விசாரணைச் சட்டத்தின் 66 இன் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய குற்றமென கிழக்கு மாகாண உதவித் தேர்தல் ஆணையா ளர் எஸ். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

## கொரோனா 2 ஆவது அலை ஏற்படும் இறுதி நிலையை நெருங்கியுள்ளோம்

### விசேட வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

இலங்கை கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்ப டும்இறுதிநிலையைஅண்மித்துள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை விசேட வைத்தியர்கள் சங்கம் விடுத்துள்ளது.

நாட்டின் நிலைமை தொடர்பில் விசேட வைத்தியர் என்ற ரீதியில் வருத் தமடைகின்றார் என அச்சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் லஸந்த ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஏற்பட்டுள்ள நிலைமை எந் தத்திசையில் திரும்பும் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கொரோனா வின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை முகம்கொடுத்த முறை மிகவும் சிறப்பா னதாகும். அது குறித்து திருப்தி அடைய முடியும். அரசின் உயர் அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கும் தவறான விழிப் புணர்வு காரணமாக மக்கள் குழப்பம டைந்துள்ள னர். கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்துக்குள் பரவியுள் ளமை நூற்றுக்கு நூறு வீதம் கூற முடி யாது. எனினும், அதற்கு அருகில் நெருங்கியுள்ளோம் - என்றார்.

## உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சை அறிவிப்பு நாளை

கொழும்பு, ஜூலை 19

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றுக்கான புதிய திகதி கள் நாளை அறிவிக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத் தல் காரணமாக மார்ச் மாதம் முதல் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இதனால் உயர்தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சை என்ப வற்றைஒத்திவைப்பதற்குகல்விஅமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

அதற்கமைய கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம் பிப்பது குறித்தும் பரீட்சைகள் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது. இதன் போது க.பொ.த உயர்தரப்பரீட்சைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கும் ஐந்தாம்தரப் புல மைப்பரிசில் பரீட்சையினை செப்ரெம்பர் 13 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் உயர்தர மாணவர்கள் மற் றும் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்க மைய உயர்தர பரீட்சைகளை ஆரம்பிப் பதற்காக தினம் குறித்து ஆராய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்தது.

இந்நிலையில் கந்தக்காடு புனர் வாழ்வு நிலையத்தில் கொரோனா வைரஸ் பர வலால் ஏற்பட்ட சுமுகமற்ற நிலைமையைக் கருத்திற் கொண்டு மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங் கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று சனிக்கிழமை கல்வி அமைச் சின் அதிகாரிகளுக்கும் சுகதாரத்துறை யினருக் கும் இடம்பெற்ற பரந்துபட்ட கலந்துரையாடலில் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வார காலம் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தோடு நாளை உயர்தரம் மற்றும் புல மைப்பரிசில் பரீட் சைகளுக்கான புதிய தினங்களை அறிவிக்கத் தீர்மானிக் கப்பட்டது.

## வடமராட்சி மீனவர்கள் ஒரு வாரம் புறக்கணிப்பு

### சட்டவிரோத மீன்பிடித் தொழில் தடுக்கப்படாமையை கண்டித்து

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடலட்டை பிடித்தல் உள்ளிட்ட சட் டத்துக்கு புறம்பான மீன்பிடிக்கு அனு மதியளிக்கப்பட்டுள்ளமை மற்றும் அவற்றைத் தடுக்க கடற்தொழில் அமைச்சர், அதிகாரிகள் தவறியமை யைக் கண் டித்து வடமராட்சி கடற் தொழிலாளர் சமாசத்துக்கு உள்பட மீனவர்கள் தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.


இதன்மூலம் இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம் பித்துள்ள இந்தப் போராட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கும் என்று அறிவித் துள்ளனர்.

வடமராட்சி கடற்தொழில் சமாசத் துக்கு உட்பட்ட மீனவர்கள் எவரும் கடற் தொழிலுக்கு செல்லமாட்டார்கள்.

வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் கடலட்டை தொழில் மற் றும் தடை செய்யப்பட்ட மீன்பிடிமுறை களுக்கு அனு மயளிக்கப்பட்டுள்ள மைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவற் றைத் தடுக்கக் கோரி கடற்தொழில் அமைச்சர் உள்ளிட்டோரிடம் வலியு றுத்தியும் நடவடிக்கை எடுக் கப்பட்டா மையைக் கண்டித்தும் வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசத்துக்கு உட் பட்ட மீனவர்கள் இந்தத் தொழில் புறக் கணிப்புப் போராட்டத்தை முன்னெ டுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத் துக்கு வடக்கு மாகாண கடற்தொழி லாளர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று வடமராட்சி கடற் தொழிலாளர் சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காகவே தமிழ்மக்கள் ஆணைவழங்குகின்றார்கள். அத்தகைய தீர்வினைப் பெறுவதற்காக நாம் தொடர்ந்தும் ஆட்சியில் உள்ளவர்களுடன் பேச்சுகளை முன்னெடுப்போம் என்று புளொட் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான த.சித்தார்த்தன் 'வீரகேசரி' வாரவெளியீட்டுக்கு வழங்கிய செவ்வியில்



# சமஷ்டி ரீதியிலான தீர்வுக்காகவே ஆட்சியாளர்களுடன் பேசுவோம்!

தெரிவித்தார். செய்தியாளர் ஆர்.ராமுக்கு அவர் வழங்கிய அச்செவ்வியின் முழுவடிவத்தை புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக் கள் விடுதலை முன்னணி அனுப்பி வைத்துள்ளது. அதன் முழு விவரம் வருமாறு:-

**கேள்வி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கடுமையாக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு உங்களுடைய பதில் என்ன?

**பதில்:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் ஏறக்குறைய ஏகோபித்த ஆணையை பெற்ற தரப்பாக இருக்கின்றது. அதிகளவான பிரதிநிதிகளைக் கொண்ட தரப்பாக உள்ளது. அவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரப்பாக கூட்டமைப்பு காணப்படுவதால் அந்த இடத்தினை கைப்பற்ற வேண்டுமென்பதில் ஏனைய தரப்புக்கள் மிகத்தீவிரமாக உள்ளன. ஆகவே தான் அந்த தரப்புக்கள் பலமாக இருக்கின்ற கூட்டமைப்பின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றன.

> **தற்போதைய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்திலேயே காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழலில் பொறுப்புக்கூறவல்ல அதிகாரங்களைக் கொண்ட நபராக அவரே காணப்படுகின்றார்.**

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறுகின்றார்

இதில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் கூட்டமைப்பினை விமர்சிக்கின்றன என்பதற்கு அப்பால், தேசிய கட்சிகளும், ஆளும் தரப்பு கட்சிகளும் திட்டமிட்டு களமிறக்கப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்களும் கூட்டமைப்பினை விமர்சிப்பதுதான் வேடிக்கையாக உள்ளது. இந்த விமர்சனங்கள் மக்கள் மத்தியில் சில குழப்பங்களை ஏற்படுத்தினாலும் மக்கள் மிகத் தெளிவாக உள்ளார்கள். அவர்கள் நிச்சயமாக தீர்க்கமான முடிவினைத் தேர்தலில் வழங்குவார்கள் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உள்ளது.

**கேள்வி:-** வடக்கு கிழக்கில் கூட்டமைப்பிற்கான அங்கீகாரம் தொடர்ச்சியாக கிடைத்து வந்திருந்தாலும் கடந்த நான்கரை வருடங்களில் அதன் செல்நெறியால் மக்கள் மத்தியில் விமர்சனங்களும், அதிருப்திகளும் ஏற்படவேயில்லை என்று கூறுகின்றீர்களா?

**பதில்:-** இல்லை. நான் அவ்வாறு கூறுவதற்கு விழையவில்லை. அதிருப்திகள் இருக்கின்றன. ஆனால் கூட்டமைப்பு எதனையுமே செய்யவில்லை என்றவாதத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. 2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் மைத்திரி - ரணில் கூட்டரசு அமைக்கப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்புக்களை வழங்கியது. அதுமட்டுமன்றி மைத்திரிபால சிறிசேனவே தன்னை ஜனாதிபதியாக்கிய தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்க மாட்டேன் என்றுதான் கூறிவந்தார். ரணில் விக்கிரமசிங்கவும் நல்லெண்ண சமிக்ஞைகளையே காட்டினார்.

அவ்விதமான, நிலைமைகளால் நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்படும் என்ற நாம் எதிர்பார்த்தோம். சர்வதேச தரப்புக்களும் நம்பிக்கை கொண்டிருந்தன. இடைக்கால அறிக்கை வரையில் அந்த முயற்சிகள் சென்றிருந்தபோதும் அதற்கு அப்பாற் செல்வதற்கு தென்னிலங்கை அரசியல் சூழல்கள் சதகமாக அமைந்திருக்கவில்லை. இதற்கெல்லாம் அப்பால் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சி என்ற வகையிலும் நாங்களாக முயற்சிகளை குழப்பியவர்களாகவும் ஆகக் கூடாது என்பதற்காக நாம் புதிய அரசமைப்பு விடயங்களுக்கு ஒத்துழைப்புக்களை நல்கினாலும் அந்த முயற்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருந்தன என்பதை தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தியிருக்கின்றேன். ஆகவே மக்களைத் திசைதிருப்பும் வகையில் நாம் செயற்படவில்லை. யதார்த்தமான விடயங்களை கூறியிருக்கின்றோம்.

இதனைவிடவும், தமிழ் அரசியல் கைதிகள் தற்போது 96பேரே இருக்கின்றார்கள். வலிவடக்கில் மாத்திரம் 4ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான காணிகள் விடுவிடுக்கப்பட்டுள்ளன. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் ஐ.நா. தீர்மானத்திற்கு அமைவாக அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

எனினும் அதன் தலைவரான சாலிய பீரிஸ்ஸே பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைமையைப் பகிரங்கப்படுத்தியிருந்தார். இவ்விடயங்களுக்கு அப்பால் அபிவிருத்தி விடயத்தில் மயிலிட்டி துறைமுகம், பலாலி விமானநிலையம் என்று கணிசமான அளவு விடயங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக நேர்மையாக எம்மாலானசெயற்பாடுகளைமேற்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:-** வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்திற்கு பொறுப்புக்கூறப்படுமென்ற நம்பிக்கையுடன் இருக்கின்றீர்களா?

**பதில்:-** இந்த விடயத்தில் நிச்சியமாக பொறுப்புக்கூறப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்திலேயே காணமலாக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழலில் பொறுப்புக்கூறவல்ல அதிகாரங்களைக் கொண்ட நபராக அவரே காணப்படுகின்றார். அந்த அடிப்படையில் அவர் பொறுப்புக் கூறவேண்டும். அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது. அதற்கான அழுத்தங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிச்சயமாக நாம் அடுத்துவரும் காலப்பகுதிகளில் வழங்குவோம்.

**கேள்வி:-** 13,19ஆவது திருத்தச்சட்டங்களை மாற்றியமைக்கும் நோக்குடன் புதிய அரசமைப்பு பற்றி ராஜபக்ஷ தரப்பு கூறுகின்ற நிலையில் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பு பணிகளுக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகக் கூறுகின்றதே?

**பதில்:-** ராஜபக்ஷ தரப்பினுள் உள்ள ஒருசிலரே 13ஆவது திருத்தச்சட்ட நீக்கம் பற்றி பேசுகின்றார்கள். உண்மையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தினை இலங்கை அரசாங்கத்தினால் எழுந்தமானமாக நீக்க முடியாது. அதற்கு இந்தியாவும் அனுமதியளிக்காது.

மறுபக்கத்தில் 19ஆவது திருத்தசட்டத்தினை நீக்கி அதிகாரக் குவிப்பினை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளார்கள். அவ்வாறிருக்கையில், அடுத்த ஆட்சியில் புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அதில் தமிழ் மக்களுக்கான அபிலாசைகளை உள்ளடக்கிய அர்த்தபுஷ்டியான தீர்வொன்று முன்வைக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அரசமைப்பொன்றை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமேற்பட்டால் அப்போது ஒத்துழைப்பளிப்போம் என்றே கூறுகின்றோம். அதனையே நாம் மக்கள் முன் வைத்து ஆணை பெற்றுக் கொள்கின்றோம். வெறுமையான அரசமைப்புத் திருத்தங்களுக்குக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவளிக்கப் போவதில்லை.

**கேள்வி:-** தற்போதைய ஆட்சியாளர்களை மையப்படுத்திய அரசியல் சூழலில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று சாத்தியமென்று கருதுகின்றீர்களா?

**பதில்:-** சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைப் பெறுவதற்கே மக்கள் எமக்கு ஆணை வழங்குகின்றார்கள். ஆகவே நாம் அதனை மையப்படுத்தியே நகர வேண்டும். மேலும் தற்போதைய ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் தானாக இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை வழங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க மாட்டார் என்பதை நாம் நன்கு அறிவோம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாகவே அவர் இனப்பிரச்சினை விடயங்களை கையாளப்போவதில்லை என்று கூறிவிட்டார். தனது சகோதரரே அதனைக் கையாள்வார் என்றும் கூறியிருக்கின்றார்.

யார் கையாள்கின்றனர் என்பதற்கு அப்பால், தமிழ்த் தரப்பு ஒரே அணியாகப் பலமாகச் செல்ல வேண்டும். அவ்வாறு சென்றால்தான் இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட எந்த விடயமாக இருந்தாலும் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான பலம் எம்மிடமிருக்கும். அதுமட்டுமன்றி பிரிந்து நின்று சர்வதேச ரீதியாக கூட எமது விடயங்களைக் கையாள முடியாது. அவ்வாறு பிரிந்து நின்று முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றபோது சர்வதேசமும் தமிழர்கள் விடயத்தில் தமது கரிசனையைக் குறைத்துகொண்டு விடுவார்கள்.

**கேள்வி:-** தற்போதைய ஆட்சியாளர்களுடன் இனப்பிரச்சினை தொடர்பில் பேசுவதால் பயனில்லை என்று கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெலோ கூறியுள்ள நிலையில் உங்களின் நிலைப்பாடு என்ன?

**பதில்:-** ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பேசுவதில் பயனில்லை. ஏற்கனவே நாம் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால் நாம் ஆட்சியில் இருப்பவர்களுடன் பேச்சுகள் ஊடாக விடயங்களை முயற்சிக்காது இருக்கமுடியாது. அவ்வாறு இருந்தால் எமக்கே தீமை. எனவே எந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடத்தில் இருந்தாலும் நிச்சியமாக நாம் பேச்சுக்களை முன்னெடுத்து முயற்சிகளை தொடர்ந்துகொண்டே இருப்போம். 1956இல் தனிச்சிங்களச் சட்டத்தினை பண்டாரநயக்க கொண்டுவந்த பின்னர் 1958இல் அவருடன் பேச்சுக்களை நடத்தி செல்வா ஒபந்தங்களைச் செய்திருக்கின்றார். ஆகவே நாம் முயற்சிக்காமல் இருக்க முடியாது.

## கூட்டமைப்பை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:-** எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தொடர்சியாக நீடிக்குமா?

**பதில்:-** தொடர்சியாக நீடிக்க வேண்டும். ஒரு மாற்று அணி தேவை என்ற அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உருவாக்கப்பட்டது. ஒரு வலுவான கூட்டணியாக உருவாகும் என எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் தேர்தலில்களிலும் தொடர்ந்து போட்டியிடுவோம்.

**கேள்வி:-** தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கில் எத்தனை ஆசனங்களை கைப்பற்றும்?

**பதில்:-** எத்தனை ஆசனங்களை என்பது தேர்தல் முடிந்த பின்னர் தான் தெரியவரும். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை விட அதிகப்படியான ஆசனங்களை கைப்பற்றுவோம் என்பதில் நம்பிக்கை உண்டு. எம்முடைய வெற்றி வாய்ப்பு மிகப்பிரகாசமாக உள்ளது.

**கேள்வி:-** முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 75 கள்ளவாக்குகளை தான் போட்டார் எனக் கூறியிருந்தார். அது பற்றிய உங்களுடைய கருத்து?

**பதில்:-** சில பேருக்கு நாக்கில் சனி நின்று பேசுவதாகச் சொல்வார்கள். அது போலத் தான் கருணா, சிறிதரன் போன்றவர்களின் நாக்கில் சனி இருக்கிறது. இதுதான் இவர்களைப் பேச வைக்கிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ்பாணம் வருகை தந்த தேர்தல் ஆணையாளர் இதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இருக்கிறார். ஆனால் நிச்சயமாக சிறிதரன் 75 கள்ள வாக்குகளைப் போட்டிருக்க மாட்டார் என்பது நூறு வீதம் உண்மை. அவர் தன்னுடைய வாக்கை போட்டாரா என்பது கூட சந்தேகமே.

**கேள்வி:-** இறுதியாக மக்களுக்கு கூற முனைவது?

**பதில்:-** இது ஒரு மாற்றத்திற்கான சந்தர்ப்பம். இதனை தவறவிட்டால் மீண்டும் ஒரு மாற்றத்திற்கு 5 வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே கிடைத்துள்ள சந்தர்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி மீன் சின்னத்திற்கு வாக்களித்து எங்களைப் பலமான அணியாக மக்கள் அனுப்புவார்கள் என நம்புகின்றேன்.

காலைக்கதிர் Kalaikkathir

# மருதமுனையில் நேற்று விபத்தில் நால்வர் காயம்

அம்பாறை, ஜுலை 20

தனியார் பஸ் மற்றும் வான் நேருக்கு நேர் மோதியதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள மருதமுனை பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் தனியார் பஸ் பகுதியளவில் சேதமடைந்ததுடன் வான் முற்றாக சேதமடைந்துள்ளது.

வானில் பயணம் செய்த நால்வர் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தனியார் பஸ்ஸைச் செலுத்திய சாரதி கல்முனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

விபத்தில் சிக்கிய வான் தனியார் சாரதி பயிற்சி பாடசாலை ஒன்றின் பெயரை கொண்ட தாகக் காணப்பட்டது.



# ‘வட்ஸ் - அப்’ மூலம் பாலியல் தொழில்!

## 2 பெண்கள் உட்பட மூவர் கைது

‘வட்ஸ் – அப்’ தொழில்நுட்பம் ஊடாகப் பெண்களின் படங்களை அனுப்பி நடமாடும் பாலியல் தொழிலை நடத்தி வந்த நபர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாடு ஒன்றுக்கு அமைய கல்கிஸ்ஸைப் பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகேவின் பணிப்புரைக்கு அமைய, விசேட அதிரடிப் படையினர் சில தினங்கள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட் டுள்ளமையுடன், பயணித்த கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த மேலதிக விசாரணைகளை கல்கிஸைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் மாட்டினர்!

கொழும்பு, ஜுலை 20

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித் தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேர்தல் சட்டவிதிகளை மீறியதாக 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 147 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 44 பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, அரச வாகனங்கள் 2 உட்பட 60 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இவை தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவித்து அவரது ஆலோசனைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் – என்றார்.

# யான் ஓயா காட்டில் தொங்கும் சடலம்!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை–ஹொறவபொத்தான பிரதான வீதி யான் ஓயா காட்டுப்பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யான் ஓயா பகுதியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப்பகுதியில் மரத்தில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதாகத் தேன் எடுக்கச் சென்ற சிலர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் தூக்கில் தொங்கிய நிலையில் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும், அது யாருடையது என்பது பற்றிய விவரம் இன்னும் தெரியாத சூழலில் அது தொடர்ந்து தொங்கிய நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தைப் பார்வையிடுவதற்காக இன்று திங்கட்கிழமை கெப்பிற்றிகொலாவ நீதிமன்ற நீதிவான் சம்பவ இடத்திற்குச் செல்ல உள்ளார் எனவும் கூறப்பட்டது.

சடலம் யாருடையது என்பது பற்றிய புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், அது கொலையா அல்லது தற்கொலையா பற்றிய விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் ஹொறவபொத்தான பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# போர் முடிந்த பின்னரும்...

( 06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் உள் நாட்டுக்குள்ளேயே ஒரு நிரந்தரத் தீர்வைப் பெறுவதற்குத்தான் முயற்சிக்கின்றோம் என்ற நியாயங்களை அவர்கள் பக்கத்திற்கும் எடுத்துச்சென்று சொல்ல வேண்டும். உண்மையைதான் சொல்லுகின்றோம் என அவர்கள் அதை நம்ப வேண்டும். ஏனெனில் நம்ப முடியாத அளவுக்கு – சந்தேகம் எழுப்பும் அளவுக்கு – அங்கே பிரசாரம் செய்யப்படுகின்றது.

இவர்களை நம்பாதீர்கள், நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்கள் என்றும், திரும்ப ஒரு தடவை ஆயுதம் எடுத்து போராட முனைகின்றார்கள் என்றெல்லாம் தொடர்ச்சியாகப் பரப்புரை நடக்கின்றது. அது இங்கே எமக்குத் தெரியாது. சிங்கள மொழியில் வரும் ஊடகங்களின் செய்திகள் அவை. அந்த ஊடகச் செய்திகள் இங்கே வந்தாலும் புரியாது.

அவ்வாறான பரப்புரை அங்கே நடக்கும் அதே வேளையிலே அதை செய்கின்ற சிங்கள இனவாதிகள் அவர்களே தங்களது முகவர்களையும் எங்கள் மத்தியிலும் வைத்துக்கொண்டு எதிரான பிரசாரத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கின்றார்கள்.

இங்கே வந்து அவர்கள் தெற்கில் கூறுவதை கூற முடியாது . அதனால் தமிழ் தேசியத்தை மறுதலிக்கின்றார்கள் இவர்கள், தேசியத்தை தொலைக்கின்றார்கள் என்று சொல்லுவது யார்? அங்கஜனின் மேடையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்கள் ஒலிக்கப்பட்டது. இது சென்ற தேர்தலிலே நடந்தது. இது என்ன விசித்திரம்? ஆட்சியாளர்களின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் – பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்தவர் அவர். தனது மேடையில் புலிகளின் எழுச்சிப் பாடல்களை போடுகின்றார். இது போலித் தேசியம்.

இவ்வாறு தேசியத்துக்கு எதிரானவர்கள் என எங்களைச் சித்திரிக்கும் செயல்பாடு தொடர்ச்சியாகவே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பலியாகுபவர்களும் பலர். எமது மக்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். போர் முடிந்த பின்பு தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் எங்களுடைய மக்களின் வாக்குப் பலத்தால் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நாங்கள் இன்னமும் உயிரோடு தான், உயிர்ப்போடுதான் இருக்கின்றோம், எங்கள் நிலைப்பாட்டில் எள்ளளவும் மாற்றம் இல்லை,நாங்கள் ஒரு மக்கள் கூட்டம், எங்களுக்கு ஓர் நிரந்தரமான தீர்வு வேண்டும், எங்களுக்கும் இறைமை உண்டு, அதன் அடிப்படையில் ஆட்சி முறையைத் தேர்ந்தெடுப்பதற்கு சுய நிர்ணய உரித்துண்டு என்ற தீர்ப்பு மக்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் சர்வதேசம் எங்களைப் பார்க்கின்றது. தொடர்ச்சியான இந்த ஜனநாயகத்தின் புகழ் புறந்தள்ள முடியாதது.

அந்த ஜனநாயகத் தீர்ப்புக்களின் மத்தியில்தான் எமது மக்களின் நிலைப்பாடு இதுதான் என நாம் சொல்லக்கூடியதாக இருக்கின்றது. மக்கள் அந்த ஆணையை வழங்காவிட்டால், இதுதான் மக்களின் நிலைப்பாடு என நாம் சொல்ல முடியாது.

எமது மக்கள் தெளிவான அரசியல் சிந்தனை உடையவர்கள். தொடர்ச்சியாக எவ்வளவு தான் குழப்பங்கள் வந்தாலும், எவ்வளவு சலனங்கள் பரவ விடப்பட்டாலும் அவர்களின் சிந்தனையில் தெளிவு இருக்கின்றது. இந்த தேர்தலிலும் அந்த தெளிவின் பால் ஆணையைக் கொடுப்பார்கள் . ஆனால் எங்களைவிட தீவிர தமிழ்த் தேசியவாதிகளாக தங்களைச் சித்திரித்துக்கொண்டு இருப்பவர்களும் அங்கே இருக்கின்ற சிங்கள இனவாதிகளின் முகவர்கள் என்பதனை மக்கள் மறந்து விடக்கூடாது. மக்கள் அவர்களை அடையாளம் காண வேண்டும். எங்களுடைய இருப்பைத் தகர்ப்பதற்குச் செயல்படுகின்ற அனைவரும் தமிழ்த் தேசியத்துக்கு மாறான விரோதிகள் என்பதனை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தெற்கில் உள்ள ஆட்சியாளர்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக அழித்து விடமுடியாது என்பது தெரியும். அதற்காக எவ்வளவு நாள் முயன்றார்கள்? நான் எல்லாக் கட்சிகளையும் இரண்டாக பிளந்தேன். ஜே.வி.பியைக் கூட இரண்டாக பிளந்தேன். ஆனால் இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளக்க முடியவில்லை என ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதியிடம் மஹிந்த ராஜபக்ஷ ஆதங்கப்பட்டமை எமது காதுகளுக்கு எட்டியது.

கூட்டமைப்பை இல்லாமல் செய்ய முடியாது. அதன் பலத்தைக் குறைக்கலாம். அதற்கு எங்களுடைய கோங்களை வைத்தே அதனை உரத்துக்கூறுபவர்களை உருவாக்கி, எமது பலத்தை குறைக்க முயலலாம். அதைத்தான் இப்போது செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

ஒரே அணியாக – ஒரே பலமாக – வடக்கில் இருந்தும், கிழக்கில் இருந்தும் மக்கள் ஒரே நிலைப்பாட்டில் வாக்களிக்கின்றார்கள் என்ற செய்தியை சொல்லவைப்பது அத்தியாவசியமானது. ஆனையிறவிற்கு அப்பால் என்ன இருக்கிறது எனத் தெரியாதவர்களும், கிழக்குக்குப் பாதை தெரியாதவர்களும் இன்று தமிழ்த் தேசியம் பேசுகின்றனர்.

எங்களுடைய பலத்தை சிதைப்பதற்காகவே செயல்படுகின்றனர். ஆகையினாலே மிகத் தெளிவாக இந்த தேர்தலிலும் மக்கள் அவர்களைப் புறந்தள்ள வேண்டும். ஒரே அணியாக நாங்கள் செல்வதாக இருந்தால் 20 ஆசனங்களோடு நாடாளுமன்றத்திற்கு சென்று நாங்கள் பேரம் பேசுகின்ற சக்தியாக விளங்க வேண்டும்.

எதற்காக பேரம் பேசப்போகின்றோம்? அது மக்களின் சலுகைகளுக்காக அல்ல. அவர்களின் உரிமைகளுக்காக. எமது இலக்கு எமது மக்களின் கரத்தில் அரசியல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதுவரையான காலத்தில் அவர்களின் தேவையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அவற்றைப் பெறும் பேரம் பேசும் சக்தியாக – வடக்கு கிழக்கின் ஒரே அணியாக ஒன்றாக இருக்கின்றார்கள் என்று இந்த அமைதிப் புரட்சி மூலம் உரக்கச் சொல்லப்பட வேண்டும்.

அமைதியாக ஒரு புள்ளடியிடுவது சில வேளைகளில் மாபெரும் புரட்சியை உண்டாக்கும். உலகுக்கு உரத்து ஒரு செய்தியைச் சொல்லும். அந்தச் செய்தியை சொல்வதற்குப் போடும் புள்ளடி கூட்டமைப்பில் எத்தனை எம்.பி எனச் சொல்வதற்காக அல்ல. உங்களுக்கான இருப்பை, அதாவது நாங்கள் சுய நிர்ணயம் உள்ள உண்மையின் அடிப்படையில் ஒரு தீர்வை உரக்க கேட்கின்ற செய்தியை, நீங்களே சொல்லும் செய்திதான் வாக்குச் சாவடியில் நீங்கள் செய்யப்போகும் செய்கை.

அதனால் உங்களின் உரித்துக்காக, நீங்களே செய்யும் அந்த செய்கையினை மறந்துவிடாமல் மிகக் கவனமாக அனைத்து மக்களையும் திரட்டி ஓகஸ்ட் 5 ஆம் திகதி அந்த செயற்பாட்டை – அரசியல் இருப்பைப் பாதுகாப்பதற்கான செயல்பாட்டை – நீங்களே செய்யுங்கள். – என்றார்.

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள் தப்பிக்கவும் செய்துள்ளார்.

ஆயினும் இது தொடர்பில் முறையிடச் சென்ற அரச அதிகாரிகள் மீதே பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

தென்னிலங்கையில் இருந்து வந்து வடமராட்சி வத்திராயன் கடற்பகுதியில் இரகசியமான முறையில் எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் தொழிலில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் சுருக்கு–வலையைப் பாய்ச்சிய பின்பு டைனமற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் எனக் கடற்றொழில் திணைக்களத்துக்கு முறையிடப்பட்டது. நிலையில் கடற்படையினர் சோதனைக்குச் சென்றால் கரையை நெருங்குவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து 18ஆம் திகதி மாலை விசேட அதிரடிப்படையினரின் துணையுடன் மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

5 படகுகளில் டைனமற் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட 3 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட மீன்களைக் கைப்பற்றிய திணைக்கள அதிகாரிகள், அவற்றைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதற்கான வாகன ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டு காத்திருந்தவேளை தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்றின் வடக்கு மாகாண இணைப்பாளர் என அறிமுகம் செய்த ஒருவர் மேலும் சிலருடன் இணைந்து அதிகாரிகளைக் கடமை செய்யவிடாது தடுத்ததோடு சந்தேக நபர்கள் சான்றுப் பொருள்களுடன் தப்பிச் செல்ல வழி ஏற்படுத்தியுள்ளார் எனவும் கூறப்பட்டது.

இதன்போது தடுக்க முற்பட்ட அதிகாரிகளை அவர் தாக்க முற்பட்டதால் அதிகாரிகள் அங்கிருந்து அகன்று பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றனர்.

ஆயினும் பொலிஸார் அவர்களை நேற்று முற்பகல் 10 மணிக்கு வருமாறு கூறி திருப்பி அனுப்பியுள்ளனர். அதிகாரிகள் நேற்று முற்பகல் 10 மணிக்கு பளை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு பதிவு செய்யச் சென்றபோது சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட சமயம் தப்பிச் சென்றவர்கள் சகிதம் தென்னிலங்கையைச் சேர்ந்த 30 தொழிலாளர்கள் பொலிஸ் நிலையத்தில் நின்றுள்ளனர் .

இதன்போது அதிகாரிகளிடம் முறைப்பாட்டை பெற்று விசாரணையை மேற்கொள்ளவேண்டிய பொலிஸார், அதிகாரிகளிடம் முறைப்பாட்டைப் பெறாமல் அதிகாரிகளே குற்றவாளிகள் என விசாரணை நடத்தியதோடு பொலிஸ் நிலையத்திலும் தொழிலாளர்கள் அதிகாரிகளைத் தாக்க முற்பட்ட சமயம் எந்த நடவடிக்கையும் எடுக்காது அதிகாரிகளைக் கெட்ட வார்த்தைகளால் பேசி அவமதித்துள்ளனர்.

இவ்வாறு தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவிதமான அனுமதியும் கிடையாது என அதிகாரிகள் சுட்டிக்காட்டிய போது, அவ்வாறானால் அந்த அனுமதியை உடன் வழங்குக என எச்சரித்துள்ளனர்.

இதனால் நிலை குலைந்த அதிகாரிகள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் வழங்க முற்பட்டதை அடுத்து பொலிஸார் பிற்பகல் ஒரு மணியளவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரி சுதாகரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

பொலிஸார் சட்டத்தை நடைமுறைப்படுத்த உறுதுணையாக இருப்பதற்குப் பதிலாக குற்றவாளிகளுக்கும் குற்றவாளிகளைத் தப்பிக்க வைத்தவருக்கும் உதவுமாறு கோருகின்றனர். தற்போது மேலதிக விவரங்களைத் தெரிவிக்க விரும்பவில்லை. இந்த விடயம் தொடர்பில் உடனடியாக எமது அமைச்சுக்கும் அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளோம். இது தொடர்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் பேசுவதாக அமைச்சர் அறிவித்துள்ளமையால் சக உத்தியோகத்தர்கள் பொறுமை காத்துள்ளனர். – என்றார்.

# விக்கிக்கும் கஜேந்திரகுமாருக்கும் பொதுவெளியில் வந்து பேச பயம்

## முடிந்தால் வரட்டும் எனச் சவால் விடுகின்றார் சுமந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

எங்கள் முதுகுக்குப் பின்னால் நின்று கொண்டு பொய்யான பிரசாரங்களையும் குழப்பும் வேலைகளையும் மட்டும் தான் விக்கினேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் போன்றவர்கள் மேற்கொள்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன், பொதுவெளியில் வந்து பேச இவர்களுக்குப் பயம் என்றும் முடிந்தால் வந்து பேசலாம் என்றும் சவால் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஊடக நிறுவனமொன்று விவாத நிகழ்ச்சியொன்றை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்த இருந்தது. அந்த நிகழ்வு குறித்து அதன் ஏற்பாட்டாளர்கள் ஆரம்பத்தில் எங்களுடன் பேசியிருந்தார்கள். அதாவது உங்கள் கட்சியில் இருந்து இரண்டு பேரும் அதே போல விக்கினேஸ்வரன் ஐயா மற்றும் கஜேந்திரகுமாரின் கட்சியில் இருந்து இரண்டு பேரும் பங்கேற்க வேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். அதற்கு மற்றக் கட்சித் தலைவர்கள் வருவார்களாக இருந்தால் நானும் வருவேன் என்று நான் கூறியிருந்தேன்.

ஆயினும் பலரும் வராததாலும் ஒதுங்கியதாலும் அந்த விவாத நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்னவெனில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்கினேஸ்வரன் ஐயா தமது கட்சியின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் அருந்தவபாலன் ஆகியோர் இதில் பங்குபற்றும் படி நியமித்திருந்தாராம். ஆனாலும் அவர்களும் நிகழ்வுக்கு வராமல் கடைசி நேரத்தில் பின்னடித்துவிட்டார்கள்.

அதே நேரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விவாத நிகழ்வுக்கு சுமந்திரன் வந்தால் தான் வருவதாக திரும்பத் திரும்ப நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கூறியிருக்கின்றாராம். அதே போல நானும் கஜேந்திரகுமார் வந்தால் வருவதாக கூறியிருந்தேன். ஆனால் கடைசி நேரத்தில் கஜேந்திரகுமாரும் இந்த விவாத நிகழ்வுக்கு வரவில்லை என அறிவித்திருக்கின்றார். அதே நேரம் தனக்குப் பதிலாக தன்னுடைய கட்சியின் சார்பில் காண்டீபன் என்ற ஒருவரையும் சுகாஷ் என்ற ஒருவரையும் செல்லுமாறு பணித்திருக்கிறார்.

இந்த விடயத்தை நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் நேற்றிரவு என்னிடம் சொன்ன போது நானும் அந்த நிகழ்வுக்குச் செல்லாமல் எங்கள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை அதில் பங்கேற்கும்படி நியமித்திருந்தேன். இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் தற்போது அந்த நிகழ்ச்சியையே ஏற்பாட்டாளர்கள் இரத்துச் செய்துள்ளனர்.

ஆக ஒரு பொது மேடையில் வந்து பேசுவதற்கு தலைவர்களுக்கு வக்கில்லை. விக்னேஸ்வரன் ஐயாவுக்கு வந்து நின்று பேசுவதற்கு கேட்டால் கேள்விக்கு பதில் சொல்ல அவருக்குத் தெரியாது. ஏனென்றால் எந்தக் கேள்வி கேட்கப்படும் என்று முதலே தெரிந்தால் தானே வாசிப்பதற்கு எழுதிக் கொண்டு வரலாம். அதைவிடுத்து அதில் வைத்து கேள்வி கேட்டால் அவர் எப்படி பதில் சொல்லுவார் ஆக அவர் முதலே எழுதிரைப்பண்ணி வாசிக்க வேண்டும். ஆகையால் அவர் எப்படிக் கேள்விக்கு பதில் சொல்வது குறிப்பாக கேள்வி பதில் என்று பத்திரிகையில் வருவதில் கேள்வியும் அவரே பதிலும் அவர் தான்.

மற்றவருக்கு தான் வரப் பயம். என்ன பயம் முடிந்தால் வந்து பொது வெளியில் பேசலாம். இதனைவிடுத்து எங்கள் முதுகுக்குப் பின்னால் நின்று கொண்டு பொய்யான பிரசாரங்களையும் குழப்பும் வேலையை மட்டும் செய்து கொண்டு அவர்கள் ஒரு பக்கத்தில் பயணிக்கிறார்கள்.

மறுபக்கத்தில் அவர்களும் தங்களை தீவிர தமிழ்த் தேசியவாதிகளைப் போல காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செய்வது முழுக்க குழப்பமான வேலை. மறுபக்கத்தில் அரசோடு ஒட்டிக் கொண்டிருந்து முற்று முழுதாக எங்கள் இருப்பை நாசமாக்கும் எல்லா வேலையையும் செய்து கொண்டு கூட்டத்தில் பாடுவது தமிழீழ எழுச்சிப் பாடல் தான். அங்கஜன் இராமநாதனின் கூட்டத்தில் இந்த எழுச்சிப்பாடல் தான் போடப்படுகிறது.

மேலும் இங்கு கிளிநொச்சியிலும் ஒருவர் இருக்கிறார். இப்போது சுயேச்சையாகக் கேட்கிறாராம். என்ன சுயேச்சை அவர் எங்கே இருந்தவர், என்ன செய்தவர் எப்படியாக எங்கள் தேசிய சிந்தனையைச் சிதைப்பதற்காக ஓர் ஒட்டுண்ணியாக இருந்தவர் என்பது எல்லாருக்கும் தெரியும்தானே.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக எத்தனை காலம் இருந்திருப்பார். ஆனால் அவர் எனக்கு அரசியல் பலம் போதாது என்றும் இருந்தால் நான் செய்திருப்பேன் என்றும் சொல்கிறார். அப்படியானால் போதாத பலத்தை வைத்துக் கொண்டு என்னத்தைச் செய்தார் என்பதும் எங்களுக்குத் தெரியும். கொள்ளையடித்தார். காணாமலாக்கப்பட்டவர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் சென்று சாட்சிகளைப் பெற்றபோது சாட்சியமளித்த பெற்றோர்கள் ஈ.பி.டி.பி தான் எங்களுடைய பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு போனது என்று கூறியவை எல்லாம் மறுநாள் பத்திரிகைகளிலும் வந்துள்ளன. அந்த விடயங்கள் அந்தக் குழுவின் அறிக்கையிலும் முழுமையாக இருக்கின்றன.

இவர்கள் எல்லாம்தான் வந்து இன்றைக்கு எங்கள் மக்களிடத்தே வாக்கு கேட்கின்றார்கள். இரண்டு அணிகள் ஓர் அந்தத்திலும் மற்ற அணிகள் வேறு அந்தத்தில் இருப்பதாகக் காட்டிக்கொண்டு இரண்டு பேருமே முற்று முழுதாக எங்கள் பயணத்தை சிதைக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கள் பயணத்திற்கு இதுவரை வழங்கி வந்த ஆதரவை தொடர்ந்தும் மக்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் – என்றார்.

# பிரபாகரன் ஆயுதத்தால் பெற நினைத்ததை பேனாவால் எழுதிக்கொடுக்கத் தயாரில்லை

## கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் மஹிந்த கருத்து

கொழும்பு, ஜூலை 20

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டைப் பேனாவால் எழுதிக்கொடுக்க நாங்கள் தயார் இல்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளவாய, செவனகல, தன்தும சந்தியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது:–

நாங்கள் அதிகாரத்துக்கு வந்தமையால் மத்தள விமான நிலையத்தைக் காப்பாற்ற முடிந்தது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்யும் நேரத்தில், அம்மாவட்ட மக்களின் வாக்குகளில் அதிகாரத்துக்கு வந்த அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்தபோதிலும், இதனை விற்பனை செய்ய வேண்டாம், இது எங்கள் சொத்து எனக் கூறுவதற்கு ஒரு அமைச்சருக்கும் தைரியம் வரவில்லை. எனினும், ஒன்றையும் விற்பனை செய்ய விடமாட்டோம் என சஜித் தற்போது கூறுகின்றார். நாங்கள் இந்த நாட்டின் சொத்துக்களை ஒருவருக்கும் விற்பனை செய்ய இடமளிக்க மாட்டோம். அந்தச் சொத்துகளை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பிறக்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும் பாதுகாக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுகின்றார்கள் என பத்திரிகையில் பார்த்தேன். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்தவர்கள். பண்டாரநாயக்க, டீ.ஏ.ராஜபக்ஷ போன்றவர்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியே வந்து கட்சியை அமைத்தார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கி, கட்சியை வலுப்படுத்தி, கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கும் எங்களால் முடிந்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கள் முதுகில் குத்தியது. அதன் பின்னர்தான் நாங்கள் தாமரை மொட்டின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற கட்சியை உருவாக்கி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றோம். எங்களுக்குத் தற்போது கட்சி ஒன்று உள்ளது. தற்போது கட்சியை வலுப்படுத்தி முன்னோக்கிச் செல்வோம்.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன என்னை அழைத்துப் பிரதமர் பதவியை வழங்கினார். அதற்கு முன்னர் 54 ஆசனங்கள் எங்களுக்கு இருந்த போதிலும் எங்களுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வழங்கவில்லை. 16 ஆசனங்கள் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி வழங்கப்பட்டு 6 ஆசனங்கள் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சிக் கொறடா பதவி வழங்கப்பட்டது.

நாங்களும் தந்திரங்களைப் பயன்படுத்தி பிரதமர் பதவியை ஏற்று 51 நாட்களின் பின்னர் பிரதமர் பதவியில் இருந்து விலகி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றோம். தற்போது நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்கின்றோம். நாங்கள் அதிகாரத்துக்கு வந்து சிறிய காலப்பகுதிக்குள் மாகாண சபைத் தேர்தலை பழைய முறையிலாவது நடத்துவோம்.

நாங்கள் மீண்டும் ஒன்றிணைந்து முன்னணிக்கு வந்துள்ளோம். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு இடையில் மோதல் ஏற்படும் வகையில் செயற்பட வேண்டாம். வாக்குச்சண்டைகளுக்குச் செல்ல வேண்டாம். 50 வருட அரசியல் அனுபவம் கொண்டவனாக இதனை ஆலோசனையாகக் கூறுகிறேன்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸ தரப்பு மற்றும் ரணில் தரப்பு எனப் பிரிந்த அந்த இரண்டு தரப்பினரும் சிறிகொத்த வைக்கைப்பற்றவே ஆயத்தமாகின்றார்கள்.

இந்த நாட்டின் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் சிறிகொத்தவைக் கைப்பற்ற வாக்களிக்க வேண்டும் அதனைக் காணி வழக்குத் தாக்கல் செய்து தீர்த்துக்கொள்ள முடியும்.

கடந்த நாட்கள் நான் நாடு முழுவதும் சென்றேன். ஐக்கிய தேசியக் கட்சியில் வாக்களிப்பதற்கு ஒருவர் இல்லை என அக்கட்சி உறுப்பினர்கள் என்னிடம் கூறினார்கள். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைக் கைப்பற்ற ஆயத்தம் இல்லை. கட்சியைப் பிடிப்பதற்கு மாத்திரமே ஆயத்தம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேலைத்திட்டங்கள் சிறப்பாக, தெளிவாக, வலுவாக உள்ளன என்று இன்று ஐக்கிய தேசியக் கட்சியினரும் கூறுகின்றார்கள். எனவே, அனைவரையும் இணைத்துக் கொண்டு மூன்றில் இரண்டு அதிகாரத்தை இந்தத் தேர்தலில் பெற்றுக்கொள்வது அவசியமாகும். அரசமைப்பை மாற்ற, நாட்டுக்குப் பொருத்தமான ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காக புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு நாங்கள் ஆயத்தம்.

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020



## எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!

‘உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!’

நான் உங்கள் வாக்குகளை எனக்குத் தருமாறு கேட்பதற்கான காரணத்தை உங்கள் முன் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

நான் ஒரு பிரபல தொழிலதிபராக இருந்து இன்று உங்கள் முன் நான் அரசியல்வாதியாக அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்த் தேசத்தின் உண்மையை நாடாளுமன்றத்துக்கும் எங்களுடைய தேசத்தின் மக்களுக்கும் உலகத்திற்கும் உண்மையை எடுத்து ரைப்பதற்காக உங்களிடம் உங்கள் வாக்குகளை எனக்கு ஒரு தடைவ தாருங்கள் என்று அன்பாகவும் பணிவாகவும் கேட்டு நிற்கின்றேன்.

1. கடந்த 20 ஆண்டுகால அரசியலில் தமிழ்த் தேசிய மக்களாகிய நாங்கள் போட்ட வாக்குகளால் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை இழந்து நிற்கின்றோம் என்பதையும் பல்லாயிரம் கோடிரூபாய் பெறுமதியான எங்கள் சொத்துக்களையும் இழந்து தவிக்கின்றோம் என்பதனையும் உங்களிடம் நான் நினைவுபடுத்துகின்றேன்.

2. இன்று உங்களிடம் வாக்குகளை கேட்பவர்கள் அனைவரும் 10 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரை நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்கள் என்றும் அவர்கள் செய்த நடிப்புக்களை நீங்கள் அறியாதவர்களாகவும் புரியாதவர்களாகவும் ஏன் இன்னும் மௌனிகளாக இருக்கின்றீர்கள் என்பதை நீங்கள் பல தடவைகள் உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

3. நீங்கள் 2020 ஆம் ஆண்டு தேர்தலுக்கு அளிக்கும் வாக்குகள் ஆக்கபூர்வமானதும் தமிழ் தேசத்தின் அபிவிருத்திக்கும் பல்லாயிரம் கோடிரூபாய்களை கொண்டு வரவேண்டிய தேவையும் சம உரிமை கொள்கைக்கு நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றும், தமிழ் தேசத்தின் நன்மைக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள்.



5

முள்ளிவாய்க்கால் உண்மைகள் யாவும் அம்பலத்துக்கு!

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

விண்ணன்

ப.வரதராஜசிங்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2020 இல் வெளியிடப்பெற்றது.